Registered as a Newspaper

சஞ்சீவி

# உதயன்

விலை ரூ. 60

பக்கங்கள் 16 + 8

சுடர் : 38
கதிர் : 64

ஞாயிற்றுக்கிழமை 29 ஜனவரி 2023

தை 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# '13'இனை இல்லாதொழிக்க இந்தியா அனுமதிக்காது!



## சம்பந்தன் கருத்து

**கொழும்பு, ஜனவரி 29**

**13 ஆவது திருத்தத்தை இல்லாமல் ஒழிப்பதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. ஆதலால், 13ஆவது திருத்தத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் – இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன்.** »15

## எவருக்கும் தலைவணங்காத நாட்டினை உருவாக்குவோம்!

### அனுராதபுரத்தில் ரணில் சபதம்



கொழும்பு, ஜன. 29

அனுராதபுர காலத்தைப் போன்று யாருக்கும் தலை வணங்காத, கடனற்ற வலுவான நாட்டை உருவாக்கி வருகின்றோம். அதற்குரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன – இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. »15

## வடக்கில் 100 ஏக்கர் காணியை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு, ஜன. 29

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 100 ஏக்கர் தனியார் காணிகளை உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். இதற்கமைய குறித்த காணி பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு ஜனாதி »15



## கொக்கட்டிச்சோலை படுகொலை 36ஆவது நினைவுதினம் நேற்று!

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை படுகொலைகளின் 36ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. »15

### 2024 ஆம் ஆண்டில்

## பொருளாதார வளர்ச்சி நேர்மறையில் செல்லும்

கொழும்பு, ஜன. 29

2024ஆம் ஆண்டுமுதல் நேர்மறையான பொருளாதார வளர்ச்சியை இலங்கை பதிவுசெய்யும் – இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. »15

## காரைநகர் – தீவகம் இடையே மீண்டும் படகுச் சேவை?

யாழ்ப்பாணம், ஜன. 29

காரைநகர் துறையிலிருந்து ஏனைய தீவுப்பகுதிகளுக்கிடையில் படகுச் சேவையினை மீள ஆரம்பிப்பது தொடர்பில் காரைநகர் பிரதேசசபையின் தவிசாளர் க. பாலச்சந்திரனுக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் இடையே கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றது. »15

## கறுப்பு நாளாக சுதந்திரதினம்

### பல்கலை மாணவர்கள் போராட்டத்துக்கு திருமலை சிவில் சமூகத்தினர் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்குக் கரிநாள் என்று வலியுறுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் பேரணியையும் போராட்டத்தையும் நடத்தவுள்ள »15

## 13ஆவது திருத்தத்தை ஒழிப்பதே ஒரே வழி!

### சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதே ஒரே வழியாகும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். »16

## இளைஞர் கொலை: இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 29

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் காயமடைந்த »13

### பணம்கேட்டு அடி, உதை

## மீற்றர் வட்டிக் கும்பலில் ஐவர் இதுவரை கைது

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்குப் பணம் பெற்றவர்களிடமிருந்து பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்துத் துன்புறுத்தும் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபர் உள்ளிட்ட ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட »15



## பொதுமக்களுக்கு ஊறுவிளைவிக்கின்ற வன்முறையாளர்கள் தண்டிக்கப்படுவர்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரட்ண எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 29

வடமாகாணத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் வன்முறையாளர்கள் தொடர்பில் தகவல் வழங்கினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிப்பு தேர்தல் வேளையில் சாத்தியமாகாது!

## 'மார்ச் 12 அமைப்பு' சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன. 29**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு அதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தவேளையில் புதிய ஆணைக்குழு அமைப்பு அல்லது தற்போது இருக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை மாற்றியமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று 'மார்ச் 12 அமைப்பு' சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் அரசமைப்புப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தின் அடிப்படையில் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க அரசமைப்புப் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை வரவேற்கின்றோம்.


ஆயினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு அதன் பணிகள் முன்னெடுக்கப்படும் வேளையில் புதிய ஆணைக்குழு அமைப்பு அல்லது தற்போது இருக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை மாற்றியமைப்பதன் மூலம் மக்களின் நம்பிக்கை இல்லாமல் போவதுடன் சமூகத்தில் சந்தேகங்களும் தோன்றும்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்படும் நபர்களால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் நாட்டின் எதிர்கால இருப்புக்கு தீர்மானமிக்கதாக அமையவேண்டும்.

அதனால் ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு வெளிப்படைத்தன்மைமிக்க முறையான நடவடிக்கை ஒன்றே தேவை. ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு முன்னர் ஆணைக்குழுக்களின் செயற்பாடு தொடர்பான நடைமுறைகளைத் தயாரிக்க வேண்டும்.

எனவே இந்த விடயங்கள் தொடர்பில் அரசமைப்புப் பேரவை எடுக்கும் தீர்மானம் மூலம் நாட்டின் ஜனநாயகமும் எதிர்காலமும் தீர்மானிக்கப்படுகின்றது.

ஆக, தேர்தல் முடிவடையும்வரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அரசமைப்புப் பேரவை தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)



## வவு.காணாமலாக்கப்பட்டோர் சங்க செயலாளர் வீட்டின் மீது ஒயில் வீச்சு

வவுனியா, ஜன. 29

வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் சிவனாந்தன் ஜெனிற்றாவின் வீட்டின் மீது கழிவு ஒயில் வீச்சுத் தாக்குதல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்டது என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் முன்றிலில் வந்த வன்முறைக் கும்பலொன்று போத்தல்களால் கழிவு ஒயில் வீச்சை நடத்திவிட்டு தப்பிச்சென்றனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான போராட்டத்தில் முன்னின்று செயற்பட்டதன் காரணமாகவே மறைமுகமாக அச்சுறுத்தல் விடுக்கும் முகமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதா? என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கச் செயலாளரை யாழ்.நீதிமன்றில் முன்னிலையாக அழைப்பாணையும் விடுக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது என்று வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் ஜெனிற்றா தெரிவித்தார். (எ-14,125)

## 4 ஆம் திகதி போராட்டத்துக்கு வவுனியா அமைப்புகள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி இடம்பெறவுள்ளது.

அதற்கமைய போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினர்களிடமும் ஆதரவு கோரி யாழ். மாவட்டத்தில் சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் உள்ள மதகுருமார், சிவில் அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலதரப்பினரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடி தமது போராட்டத்துக்கான அழைப்புகளைக் கோரினர்.

இந்த நிலையிலே வவுனியா மாவட்ட சிவில் அமைப்புகள், மதகுருமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் தமது ஆதரவுகளைத் தெரிவித்துள்ளனர். மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் போராட்டத்துக்கான ஆதரவு கோரிய கலந்துரையாடல்கள் மாணவர் ஒன்றியத்தால் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,125)

## நீதி கேட்பதற்காக எங்களை மிரட்டும் அரசு நிச்சயம் தண்டிக்கப்படும்

### வடக்கு- கிழக்கு காணாமலாக்கப்பட்டோர் சங்கம் தாக்குதலுக்குக் கண்டனம்

கிளிநொச்சி, ஜன. 29

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க செயலாளர் சிவானந்தம் ஜெனிதாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கம் கண்டனம் தெரிவிக்கின்றது என்று அதன் சங்கத் தலைவர் கலாரஞ்சினி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் சிவானந்தம் ஜெனிதாவின் வீட்டுக்கு கடந்த 26ஆம் திகதி அதிகாலை சென்ற வன்முறைக் கும்பல் கழிவு ஒயில் வீசித் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவிக்கு அண்மையில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரச புலனாய்வாளர்கள் இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்வதைக் கண்டிக்கின்றோம். நாங்கள் ஆயுதம் ஏந்தி ஈழம் கோரிப் போராடவில்லை. எமது பிள்ளைகளைத் தேடியே போராடுகின்றோம். இலங்கை அரசிடம் நீதி கேட்டு போராடினோம். நீதி கிடைக்காமையால் சர்வதேசத்திடம் நீதி கேட்டுப் போராடுகின்றோம். நிச்சயமாக இலங்கை அரசு தண்டிக்கப்படும்- என்றார். (எ-14,113)

## வீட்டின் மீது கழிவு ஒயில் வீச்சு மாணவர் ஒன்றியம் கண்டனம்

வவுனியா, ஜன. 29

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கச் செயலாளர் சிவானந்தம் ஜெனிதாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் சிவானந்தம் ஜெனிதாவின் வீட்டுக்கு கடந்த 26ஆம் திகதி அதிகாலை சென்ற வன்முறைக் கும்பல் கழிவு ஒயில் வீசித் தாக்குதல் மேற்கொண்டது. சம்பவத்தை நேரில் சென்று ஆராய்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறித்த சம்பவத்துக்கு கண்டனம் வெளியிட்டது.

இதுதொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவிக்கையில், கடந்த 15ஆம் திகதி தேசிய தைப்பொங்கல் தினத்தை யாழில் முன்னெடுத்தவேளை வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னின்று முன்னெடுத்திருந்தார்.

இதற்கு மறைமுகமான அச்சுறுத்தல் விடுக்கும் ஒன்றாகவே இதை நாம் நோக்குகின்றோம். ஆகவே தொடர்ச்சியாக காணாமலாக்கப்பட்டோரின் நீதி வேண்டி போராடுகின்றவர்கள் மீதான வன்முறைகள் தடுக்கப்படவேண்டும் - என்றார். (எ-14,125)

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்குக வவுனியாவில் கையெழுத்து சேகரிப்பு



வவுனியா, ஜன. 29

பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், அனைத்து அரசியல் கைதிகளினதும் விடுதலை மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே விடுவிப்பு ஆகியவற்றை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா மாவட்ட மக்கள் திட்ட ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையம், இலுப்பையடி ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது. நகரசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் போராட்டத்தில் பங்கேற்றனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்கள் ஆதிக்கமே நாட்டைச் சூனியமாக்கியது



## உதய கம்மன்பில ஆதங்கம்

**கொழும்பு, ஜன. 29**

**தன் சகோதரனுக்காக அரசமைப்பை மாற்றி நாட்டைச் சூனியமாக்கிய 69 லட்சம் மக்களை நெருக்கடிக்குள் தள்ளிய ஒரேயொரு ஜனாதிபதியாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விளங்குகிறார்.**

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


2015ஆம் ஆண்டு தேர்தலில் ராஜபக்சக்கள் தோல்வியடைவதற்கு குடும்ப ஆட்சி பிரதான காரணமாக அமைந்தது. 2019 ஆம் ஆண்டில் பாடம் கற்றுக்கொண்டிருப்பார்கள் என எதிர்பார்த்தோம். இருப்பினும் எமது நிலைப்பாடு இறுதியில் தவறானது. 2020 ஆம் ஆண்டு அமைச்சரவையில் ராஜபக்ச குடும்பம் ஆதிக்கம் வகித்தது. இளவரசரான நாமல் ராஜபக்சவிடம் அமைச்சர்கள் ஆலோசனை பெற வேண்டிய சூழலை கோத்தாபய ஏற்படுத்தினார்.

அமைச்சரவையில் பொருளாதார துறைசார் நிபுணர்கள் அங்கம் வகித்த போதும் நிதி நிலைமை தொடர்பில் அடிப்படைத் தகைமைகூட இல்லாத பஸில் ராஜபக்சவை நிதிய மைச்சராக நியமித்தார். 55 அரச திணைக்களங்கள் அனைத்தும் அவரது பொறுப்பின்கீழ் கொண்டு வரப்பட்டன.

ராஜபக்சக்கள் அமைச்சரவையை முழுமையாக ஆக்கிரமித்து தவறான பொருளாதார தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி முழு நாட்டையும் சீரழித்துள்ளனர். சகோதரரின் தவறான ஆலோசனைகளைக் கேட்டு கோத்தாபய ராஜபக்ச எங்களைப் பதவி நீக்கினார். எம்மைப் பதவி நீக்கி விட்டு 3 மாதத்துக்குப் பின்னர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் நிலை அவருக்கு ஏற்பட்டது.

தற்போது ராஜபக்சக்களின் தவறான பொருளாதாரக் கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார். மக்கள் படும் துயரத்தை அவர் கண்டுகொள்ளவில்லை.

தேர்தலை பிற்போட சூழ்ச்சி செய்கிறார். சரியான முறையில் செயற்பட்டாலே அவருக்கு இறுதிக் காலத்தில் மக்களால் மரியாதையளிக்கப்படும்- என்றார். (ச-இ)



# சுதந்திர தினத்தன்று கோழி அணிவகுப்பு

கொழும்பு, ஜன. 29

தற்போதைய முட்டைப் பிரச்சினைக்கு சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் தீர்வு காணாதுவிடின் கோழிகள் மற்றும் முட்டைகளுடன் அணிவகுத்துச் செல்வோம் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

நாட்டின் முட்டைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வரலாற்றில் முதற்தடவையாக கோப் குழுவுக்கு செல்ல நேரிட்டுள்ளமை நாட்டுக்கு அவமானகரமானது - வெட்கக்கேடானது. நுகர்வோர் அதிகாரசபையால் முட்டைக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டபோதிலும் அந்த விலைக்கு முட்டைகளை விற்கமுடியாது என முட்டை உற்பத்தியாளர்கள் எதிர்ப்பு வெளியிடுகின்றனர். இதனால் முட்டைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முட்டைப் பிரச்சினையைத் தீர்க்காமல் நாட்டைக் கட்டியெழுப்புவதில் இந்த அரசியல்வாதிகள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பது கேள்வியாக உள்ளது. அவர்கள் அரசமைப்புகள் மற்றும் பெரும் தலைப்புகளைப் பற்றியே பேசுகிறார்கள். ஆனால் முட்டைக்கான பிரச்சினை பேசுபொருளாற்றுள்ளது.

எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு இந்த முட்டைப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் கோழிகள் மற்றும் சேவல்களின் சத்தத்தையும் கேட்கக்கூடும்- என்றார். (ச-இ)

# மின் துண்டிக்கப்பட்டால் முறையிட முடியுமாம்!

கொழும்பு, ஜன.29

உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் மின்வெட்டுக்கான ஒப்புதல் வழங்கவில்லை. அவ்வாறு ஒப்புதல் வழங்காத மின்வெட்டுக்கு பாவனையாளர்கள் முகம் கொடுத்தால், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு எழுத்துபூர்வமாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

0775687387 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கோ, consumers@pucsl.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 0112392641 என்ற தொலைநகல் இலக்கத்துக்கோ முறைப்பாடுகளை அனுப்பலாம் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைக் காலத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடந்த 25ஆம் திகதி உரிய அதிகாரிகள் உறுதியளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டபோதும், தொடர்ந்தும் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்தநிலையிலேயே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தாமலிருப்பதற்கு இணக்கம் தெரிவித்தபோதும், அதை மீறி மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் மனித உரிமைகள் ஆணைக்குழு உரிய தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

மின் துண்டிப்பு விவகாரத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணாக செயற்பட்டமையின் காரணமாக, இணக்கப்பாட்டை தெரிவித்த நபர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

# இலங்கை வருகிறார் மூன்



கொழும்பு, ஜன.29

உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை அடுத்து இலங்கை வரும் பான் கீ மூன், காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார்.

தென் கொரிய அரசின் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவரான பான் கீ மூன் காலநிலை மாற்றம் மற்றும் பசுமை அபிவிருத்தி திட்டங்களில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதுடன் அவரது வருகையின் பின்னர் பல பசுமை பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன என்று காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேயவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் குறித்து பான் கீ மூன் தனது பயணத்தின்போது அரசாங்கத்துடன் கலந்துரையாடவுள்ளார். (எ-இ)

# இலங்கைக்கு வரவுள்ளார் பற்ரீஸியா ஸ்கொட்லன்ட்

கொழும்பு, ஜன.29

இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்ரீஸியா ஸ்கொட்லன்ட் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அழைப்புவிடுக்கப்பட்ட நிலையில் அவர் நாட்டுக்கு வரவுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியல்கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட மேலும் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சந்திப்பில் இலங்கைக்கும் பொதுநலவாய அமைப்புக்கும் இடையிலான எதிர்காலத்தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன என்று பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (எ-14,இ)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு மே 10இல்

கொழும்பு, ஜன.29

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி இடம்பெறும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சதொச ஊழியர்கள் சிலரை அவர்களின் உத்தியோகபூர்வ பணிகளிலிருந்து நீக்கி அரசியல் விடயங்களில் ஈடுபடுத்தினார் என்று ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முன்னெடுக்க முடியாது என பிரதிவாதிகள் ஆட்சேபனை முன்வைத்தனர்.

எனினும் அதை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்ததுடன் வழக்கின் விசாரணையை மே 10ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (எ-14,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மாந்தை கிழக்கு குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம்

மன்னார், ஜன. 29

மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட ஒட்டறுத்தகுளம், வண்டிகட்டுக் குளம், பாலப்பாணி குளம், கிடாப்பிடித்த குளம் ஆகிய குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

மாந்தை கிழக்கு பிரதேசசெயலரின் வேண்டுகோளுக்கிணங்க நகமா நிறுவனத்தினரால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது குளங்கள் உள்ளடங்கிய கமக்கார அமைப்பினரால் 10 ஆயிரம் மீன் குஞ்சுகளும் நகமா நிறுவனத்தினரால் 50 ஆயிரம் மீன் குஞ்சுகளும் குளங்களுக்கு விடப்பட்டன.

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் தேவைப்பாடுடைய 4 கிராமங்களில் 120 நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் பிரதேச மக்களுக்கு போஷாக்கான உணவைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



(எ-14, 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுகூடலும் பிரிவுபசாரமும்

யாழ்ப்பாணம், ஜன. 29

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடலும் பிரிவுபசார நிகழ்வும் நேற்றுச் சனிக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் அருட்செல்வன் தலைமையில்நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி கடந்த வருடம் இடமாற்றம் பெற்றும் ஓய்வுபெற்றும் சென்ற அலுவலர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-9)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடிக்கு அனைவரும் பங்காளிகளே!

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஜன.29

நல்லாட்சி அரசாங்கமும் மக்கள் விடுதலை முன்னணியும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பங்காளிகள் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு ஒரு வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது. எனினும் இதில் இருந்து மீள்வதற்கான வேலைத்திட்டத்தை முன்வைக்க அரசாங்கம் தவறியுள்ளது. அரசாங்கம் மாத்திரமல்ல, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியும் இது வரை பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான தீர்வை முன்வைக்க தவறியுள்ளன.

2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் அதிக வட்டிக்கு 12 பில்லியன் டொலரைக் கடனாக பெற்று நாட்டை கடன் பொறிக்குள் சிக்க வைத்தனர்.

வேலையில்லா பட்டதாரிகளுக்கு அரச வேலைகளை வழங்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தும், நாடு தாங்கிக்கொள்ள முடியாத நிவாரணங்களை வழங்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தும் நாடு இந்த நிலைமைக்குச் செல்ல மக்கள் விடுதலை முன்னணியும் காரணம். அரசாங்கத்தை போல் அனைத்துக் கட்சிகளும் இந்த பொருளாதார நெருக்கடியின் பங்காளிகளே - என்றார். (எ-இ)


# சிறுவர் இலக்கிய இலவச கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 29

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிறுவர் இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கான இலவச ஒரு நாள் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தமர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 2 மணிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள இளையோர் தங்கள் விவரங்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறியத் தருமாறு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை தெரிவித்துள்ளார். (ச-27)



# சிறுதொழிலாளர் ஊக்குவிப்பு வர்த்தகசந்தை வவுனியாவில்

வவுனியா, ஜன. 29

சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக வடக்கு மாகாண தொழிற்றிணைக்களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் வர்த்தகச்சந்தை வவுனியாவில் இடம்பெற்றது.

நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த வர்த்தகசந்தை நேற்றைய தினமும் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர கலந்துகொண்டு வர்த்தக சந்தையை ஆரம்பித்துவைத்தார்.

வடக்கு மாகாண தொழிற்திணைக்கள உத்தியோகத்தர்கள், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சன குமார, செட்டிகுளம் உதவி பிரதேசசெயலாளர் தர்மேந்திரா உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

சந்தையில் நெசவு உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், உணவு, ஆடை உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டன. (ச-110)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.29

வடலியம்மன் என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில், எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு முதற் கும்பாபிஷேக தின சங்காபிஷேக உற்சவமும், அடுத்த மாதம் 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5.30 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 4 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும். (ய-66)

# விற்பனை நிலையத்தினருக்கு விழிப்புணர்வுக் கூட்டம்

வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வியாபார நிலையங்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வலி. மேற்கு பிரதேசசபையின் மண்டபத்தில் சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது கடைகளை புதிதாக பதிவு செய்வதற்கான அறிவுறுத்தல்கள், கடந்த ஆண்டு சிறந்த உற்பத்திகளை விநியோகித்த கடைகளுக்கான சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

வலி. மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், சங்கானை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி ஜதுநந்தன், வலி. மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் சி.சிறிஜீவா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றினர். (ச-27)

### வடக்கு மாகாணத்தில்

# புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜன. 29

கடந்த புதன்கிழமை வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாண ரீதியில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடம் பிடித்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 83.04 வீதமானோர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று முதலிடத்தையும் தென்மராட்சி கல்வி வலயத்தில் 81.69 வீதமானோர் சித்தியடைந்து இரண்டாம் இடத்தையும், வடமாராட்சி கல்வி வலயத்தில் 81.06 வீதமானோர் சித்தியடைந்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் வவுனியா தெற்கு கல்வி வலயம் நான்காம் இடத்தையும், மடு கல்வி வலயம் ஐந்தாம் இடத்தையும், முல்லைத்தீவு கல்வி வலயம் ஆறாம் இடத்தையும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயம் ஏழாம் இடத்தையும், தீவுப்பகுதி கல்வி வலயம் எட்டாம் இடத்தையும், வலிகாமம் கல்வி வலயம் ஒன்பதாம் இடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயம் பத்தாம் இடத்தையும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம் பதினோராம் இடத்தையும், மன்னார் கல்வி வலயம் பன்னிரண்டாம் இடத்தையும், துணுக்காய் கல்வி வலயம் 13 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் 191 புள்ளிகளைப் பெற்று வட மாகாணத்தில் முதலிடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-14-60)

# யாழ். பல்கலைப் பேரவைக்கு மேலும் 5 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக மேலும் 5 பேரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்களின் பதவிக் காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. கடந்த 16 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் முன்னர் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மேலும் 5 உறுப்பினர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

அதற்கமைய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் வி.கனகசபாபதி, லங்கா சஸ்ரெயினபிள் வென்ஜஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குலேந்திரன் சிவராம், வடக்கு உணவு நிறுவனத்தின் ஸ்தாபகரும், பணிப்பாளருமான கபிலன் கருணானந்தன் மற்றும் யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண. கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வாய்ப்பூட்டு போடும் வழி என்ன?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்ப டுத்தினால் தமிழீழம் உருவாகுவதற்கு அது வாய்ப்புக் களை ஏற்படுத்தும். நாட்டில் மீண்டும் குருதி ஆறாகப் பெருக்கெடுக்கும். ஆதலால், 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்த அனுமதிக்கமாட்டோம் – இவ்வாறு அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கின் றார் விமல் வீரவன்ஸ. ''13 ஆவது திருத்தத்தின் மூலம் இலங்கையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மிகக் குறைந்தவை. லண்டன் நகரசபைக்கு உள்ள அதிகாரம்கூட இலங்கை மாகாணசபைக்கு இல்லை. ஆதலால், 13ஆவது திருத்தம் நாட்டைப் பிள வுபடுத்தும் என்பதை ஏற்க முடியாது. அதை முற்றாக நடைமுறைப்படுத்துவேன்'' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வெறும் 24 மணிநேரத்துக்குள் இந்த இனவாதக் கருத்துக்களை கக்கியிருக்கின்றார் வீர வன்ஸ.


விமல் வீரவன்ஸ இவ்வாறான இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்துவது ஒன்றும் புதிதல்ல. அவரின் அரசிய லும் வாக்குவங்கியும் இனவாதத்தை மையமாகக் கொண் டதுதான். ஆதலால், வீரவன்ஸவின் கருத்துக்களில் ஆச் சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால், வீர வன்ஸ, உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்றவர்களும் அவர்களின் கருத்துக்களும்தான் இந்த நாட்டில் இனவா தக் குருதிச்சகதி பெருக்கெடுப்பதற்கும் அது இன்றளவும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பதற்கும் பிரதான காரணங்கள். இவர்களிடத்தில் ஓர் ஆத்மார்த்த மான மாற்றம் ஏற்பட்டிருந்தால், இந்த நாடு அமைதி யைக் கண்டடைந்து ஒரு தசாப்தம் தாண்டியிருக்கும். ஆதலால், இந்த எதிர்ப்பை – அவர்கள் வெளிப்படுத்தும் கருத்தை புறமொதுக்கிவிட முடியாது. ஏனெனில், தமி ழர்களுக்குத் தீர்வை வழங்குவதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இறுதியில் ஓர் அடித்தட்டு அரசியல் மூலமாக அந்த நடவடிக்கைகளுக் குத் தடைபோடப்போகின்றவர்களும் இவர்களே.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு அனைவரும் ஏற்கும் படியான தீர்வு எதிர்வரும் சுதந்திரதினத்துக்குள் வழங் கப்படும் என்று தெரிவித்து சர்வகட்சிப் பேச்சுக்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சிக் கூட்டத்தை நடத்த முன்னர், இத்தகைய இனவாதிகளுடன் தான் ரணில் பேச்சு நடத்தவேண்டும். தீர்வைக் கண்டடையும் நடவடிக்கை களுக்கு இத்தகையவர்களை இணங்கச் செய்துவிட்டு பின்னர் ஏனையவர்களுடன் பேசுவதே பொருத்தமானது. ஏனெனில், இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இன வாதம் என்பது இலகுவாக பரவும் நெருப்பைப் போன் றது. அந்த இனவாதம்தான் நூற்றாண்டு காலப் பொருளா தாரப் பின்னடைவுக்குள்ளும் வரலாற்றுப் பேரழிவுக்குள் ளும் இலங்கையைத் தள்ளியது. இவ்வாறிருக்கையில், வீரவன்ஸ, வீரசேகர வகையானவர்களின் எதிர்ப்புக்குள் முன்னெடுக்கப்படும் இனவாதப் பேச்சானது நீடித்த அமைதியைத் தரப்போவதில்லை.

இப்போது விமல் வெளியிட்ட கருத்துகள், வழக்கமாக அவர் கக்கும் இனவாதக் கருத்துக்கள்தானே என்ற தோர ணையில் புறமொதுக்கிவிட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகச் செயலாற்றும் பட்சத்தில், அந்தத் தீர்வைத் தேடும் நடவடிக்கைகள் மற்றும் பேச்சுக்களுக்கான எதிர்ப்பு நடவடிக்கைகள் சிங்களக் கிராமங்களில் இருந்து ஆரம்பிக் கப்படலாம். விமல் போன்ற குழப்ப வாதி களின் இனவாதக் கருத்துக்களும் எதிர்ப்புப் பரப்புரைகளும் அடிநிலை சிங்கள மக்களிடம் 'இலகுவில் எடுபட்டு விடும்' கூடவே அவர்களைப் பதற்றப்படவும் வைக்கும். அதன் தொடர்ச்சியாக, ஜூலைக் கலவரம் போன்ற நிலையும் உண்டாகலாம். ஆதலால், இனப்பிரச்சி னைக்கான தீர்வைத் தேடுவதற்கு முன்னர் விமல் போன்ற இனவாதிகளுக்கு வாய்ப்பூட்டு போட்டும் வழிகளை ரணில் கண்டுபிடிக்கவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"உனக்கு சிரிப்பதற்கு, பேசுவதற்கும் நேரம் இல்லையென்றால், நீ உன் வாழ் வில் முன்னேறிக்கொண்டு இருக்கி றாய் என்று அர்த்தம்!" – அலெக்சாண்டர்




# ஐ.எம்.எப். நிதியை பெறாதுவிடின் ஆர்ஜென்டீனா நிலை உருவாகும்

## *ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜன. 29

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களை இடைநிறுத்த வேண்டும் என்று ஜே.வி.பியினர் வழங்கும் ஆலோசனையைப் பின்பற்றினால் ஆர்ஜென்டீனா நாட்டின் நிலைமையே இலங்கைக்கும் ஏற்படும். நட்பு நாடுகளான சீனா மற்றும் இந்தியாவிடமிருந்து கடன்களைக் கூட பெற முடியாத நிலை உருவாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை என்று ஜே.வி.பி. கூறு கின்றது. அவ்வாறெனில், அதற்கான மாற்று வழி என்ன என்பதையும் அவர்கள் முன் வைக்கவேண்டும். சர்வதேச நாணய நிதியத் துடன் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாவிட் டால், இலங்கை கடன் நிலைபேற்றுத் தன் மையற்ற நாடாகக் கருதப்படும்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் நட்பு நாடுகளாகக் காணப்படுகின்ற இந்தியா மற்றும் சீனாவிடமிருந்து கூட எம்மால் ஒத் துழைப்புக்களைப் பெறமுடியாது போகும். 1980ஆம் ஆண்டு ஆஜென்டீனா வங்கு ரோத்து நிலை அடைந்தது. இன்று வரை ஆஜென்டீனா பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சி பெறவில்லை.

அந்த நிலைமையே எமக்கும் உருவாகும். நாணய நிதியத்தை நாடவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்ற போதிலும், அவர்க ளின் சகல நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும் என்று கூறவில்லை. வருமான வரி 38 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இதற்கான மாற்று வேலைத்திட்டம் எம்மிட முள்ளது. எமது ஆட்சியில் நிச்சயம் இதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் - என் றார். (ச-இ)

## பேரவாவியை அழகுபடுத்த ஜப்பான் நிறுவனம் ஒப்புதல்

கொழும்பிலுள்ள பேரவாவியை 3 மில்லியன் டொலர் செலவில் இலவசமாக அழகுபடுத்த ஜப்பான் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதி யின் ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

பேரவாவி மாசடைந்து துர்நாற்றம் வீசுவதால் அதனை சுத்தப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளுக்கி ணங்க இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் 6 மாதங்களுக்குள் முடிவுறுத்தப்படும். இது தொடர்பான ஒப்பந் தங்கள் எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் மேற்கொண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரி விக்கப்படுகிறது. (ச-இ)

**நாளை** 30.01.2023 திங்கட்கிழமை தை 16

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : | 12.36 – 02.06 |
| ராகுகாலம் | : | 08.06 – 09.36 |

கார்த்திகை விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பத்து பரப்பு காணி இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளது. லேலனட் கொம்பனி நாவற்குழி அருகாமையில் உள்ள வீதியில் A9 றோட்டில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் நல்ல தண்ணீர், நல்ல சூழல், நல்ல நிலப்பரப்பு.

077 638 5683, 076 755 8606


# சான்றிதழ் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் இளைஞர் விவகார அலகால் கடந்த 2022 ஆம் ஆண்டு மூன்றுமாத கால யோகக் கலைப் பயிற்சி நடத்தப்பட்டது.

பயிற்சியில் இரண்டாம் அணியில் பங்குபற்றி இறுதிச் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக் கான சான்றிதழ்கள், நல்லூரில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் உதவிச் செயலாளர் சிவப்பிரியா சுபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், வடமாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினர். (எ-14.66)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் Dr. சி. கணேசலிங்கம்

முன்னாள் பொறுப்பு வைத்திய அதிகாரி பிரதேச வைத்தியசாலை -இளவாலை,
உப தலைவர் நோயாளர் நலன்புரிச்சங்கம் – இளவாலை



வைத்தியசாலையின் வரலாற்று நாயகர் எனப் புகழத்தக்க வகையில் தனது 10 வருடங்களுக்கு மேலான மருத்துவ சேவைக்காலத்தில், நமது வைத்தியசாலைக்கான சொந்த நிலம், மருந்தகத்துடன் கூடிய வசதியான வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு மகப்பேற்றுமனை, அம்புலன்ஸ், வாகனம் என்பவற்றை தனது துஞ்சா முயற்சியின் விளைவாக கண்டவரும், தனது துணைவியாரின் நினைவாக காவலாளி கூடத்தை அமைத்து தந்தவருமான நமது சங்கத்தின் ஆரம்ப கால தலைவரும் ஓய்வு காலத்தின் உப தலைவருமான Dr.சி. கணேசலிங்கம் அவர்களின் மறைவையொட்டி 31ஆம் நாளான இன்று நமது சங்கம் அன்னாருக்கு நினைவஞ்சலி செய்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறை யருளை இறைஞ்சுகின்றது.

நோயாளர் நலன்புரிச்சங்கம்
பிரதேச வைத்தியசாலை, இளவாலை.

(CS 48782) (3/6)


# இனப்பிரச்சினை அரசியல் தீர்வு உரையாடலின் 4 ஆவது அமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 29

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடலின் 4ஆவது தொடர் அமர்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை மற்றும் அரசறிவியல் துறை பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்" எனும் தலைப்பிலான அமர்வு கடந்த மாதம் ஆரம்பமானது. அதன் தொடர்ச் சியாகவே 4 ஆவது அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக சந்திரிக்காவின் தீர்வுத் திட்டம் தொடர்பான ஆய்வை வருகை விரிவுரையாளரும் பத்தி எழுத்தாளருமான ஐ.வீ.மகாசேனன், விரிவுரையாளர் ஜஸ்மியா குகதாசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கொ.ரீ. கணேசலிங்கம் தொகுப்புரையையும் சிரேஸ்ட விரிவுரையாளர் திருச்செந்தூரன் நன்றியுரையினை நிகழ்த்தினர். அத்துடன் அமர்வில் கலந்துகொண்டவர்களின் கேள்விகளுக்கும் துறைத்தலைவர்கள் பதிலளித்தனர்.

அமர்வில் அரசியல் ஆய்வாளரும் யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளருமான சி.அ.யோதிலிங்கம், அரசறிவியல் துறை மாணவர்கள், அரசியல் ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-14)


## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 08 . 1952



இறப்பு 27 . 01 . 2023

### திரு.சுந்தரம் சிவலிங்கம்

(முன்னாள் பொதுமுகாமையாளர்-திருவையாறு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம்)

கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கு 8ம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் புகையிரத வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சுந்தரம் சிவலிங்கம் நேற்று முன்தினம் (27.01.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் சின்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் இராசரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயந்திமாலா(மஞ்சு)வின் அன்புக் கணவரும், ராஜீகன்(அபிவிருத்தி உத்தியோகத்தர்- RDHS Office, யாழ்ப்பாணம்), ரனீசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் நெடுந்தீவு), ரதீசன், (ஆசிரியர்-கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீர்தா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- பிரதேச செயலகம்,உடுவில்), விக்னேஸ்வரி (ஊடகவியலாளர்), சசிரேகா (ஆசிரியை-யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, சிவபாக்கியம் மற்றும் மயில்வாகனம், கந்தசாமி, யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாய்நிதீஷ், டறீஸ், ஜிதுசா, சாயிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சபாரட்ணம் மற்றும் மங்களேஸ்வரி, மகாலக்ஷ்மி, கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமலர், கலைமகள், வசந்தகுமார், கதிர், காலஞ்சென்ற சிறீதரன், வன்னியசேகரன், Dr. சத்தியகுமார், கலையரசி, காலஞ்சென்ற ஜெயக்குமார், உதயகுமார், நாகேஸ்வரி, ஞானமலர், கமலா, நித்தியகுமார், பிரேம்குமார், மதியழகி, கிருஷ்ணபவானி ஆகியோரின் மைத்துனரும் பிரதீபன் (பிரபா), காலஞ்சென்ற பத்மப்பிரியா, காலஞ்சென்ற ரவீந்திரன்(சதீஸ்), ராஜி, சஞ்சீவன் ஆகியோரின் சித்தப்பாவும், பிரசாந், பிந்துஜாவின் பெரியப்பாவும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா (காந்தன்), திருநாவுக்கரசு(ரூபன்), சுமதி(சாந்தா), வரதராசா(ராசன்-கனடா), ரவி, தவராசா(ரகு), சிறிதரன், வசந்தமலர்(வசந்தி), காலஞ்சென்ற தவமலர், புஸ்பமலர்(கலா), ராசமலர்(சறோ) ஆகியோரின் அன்பு தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை( 30.01.2023) அன்று மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 900 4442




# பெற்றோருக்கு விழிப்புணர்வு

சாவகச்சேரி ஜன.29

கச்சாய் பிரதேச மாணவர்களுக்கான கல்வியின் முக்கியத்துவம், எதிர்கால நலனுக்காக கல்வியை உயர் மட்டத்துக்கு விரிவுபடுத்துதல், பொருளாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் கல்வியின் பின்னர் பிள்ளைகள் தொழில்சார் பயிற்சியை தொடருதல் என்பவற்றை உள்ளடக்கிய பெற்றோருக்கான விழிப்புணர்வு செயலமர்வு கச்சாய் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. பிரதேசசெயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்பட்டது. (எ-14,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 03 . 1951



மறைவு 27 . 01 . 2023

### திருமதி லோகேஸ்வரி நவரத்தினம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி நவரத்தினம் கடந்த (27.01.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற காராளர் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆரம்ப லயன்ஸ் கழக உறுப்பினர் திரு. கா.நவரத்தினம் (விமலாஸ்) அவர்களின் அன்பு மனைவியும், வித்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி), சுகந்தன் (விமலாஸ் உரிமையாளர்), லதா (பிரான்ஸ்), தீபா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு தாயாரும், மாறன் (யாழ். பல்கலைக்கழகம்), சுதாஸ்கரன் (பிரான்ஸ்), ரஜீந்திரதாஸ் (பொறியியலாளர், அவுஸ்ரேலியா), உஷாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற லோகேஸ்வரன் (மின் அத்தியட்சகர்), ஞானேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர்), இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், அரன்மகன் (ஓய்வுநிலை ஆசிரியர்), சுழகலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், செந்தூரி, ஸஞ்ஜய், சாதனா, ஆதித்தியன், ஆருஷி, சாத்மிகா, சாத்விகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாவா/ லயன்ஸ் S.K. நவரத்தினம் (விமலாஸ்)
கணவர்
தொ.பே : 077 428 5977, 077 769 6771
(IN 18715) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 01 . 1943



மறைவு 27 . 01 . 2023

### நன்னி அருளானந்தம்

சிவன்பண்ணை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நன்னி அருளானந்தம் அவர்கள் கடந்த (27.01.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னி - அன்னம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சந்திரா அவர்களின் அன்புக் கணவரும், ஜெயரஞ்சித் (லண்டன்), சுதேஜா (பிரான்ஸ்), ஜெயகாந் (S.D.O பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சுஜாதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிபா (லண்டன்), சுரேஷ்குமார் (பிரான்ஸ்), ஜீவிதா, சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனாரும், தர்மலிங்கத்தின் அன்புச் சகோதரனும், திரவியம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அக்ஸய், ஆகித், டனித் (லண்டன்), யதுர்ஷன், ரெனிஸ், சஞ்சய், இனேஷ் (பிரான்ஸ்), பிரித்திகா, டனிக்கா, ஆர்திக் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
62/2, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
(CS 48833) (3/6)
077 711 7884

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய
CS 36443

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு.இரணைபாலை றோ.க.த.க மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும்

### றொ.ஹெவின்

அவர்கள் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, அவருக்கு வழிகாட்டியாக இருந்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மம்மா,
மாமாமார்கள்.
K.வரதன்

மு.இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு.

## சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோரல் இளவாலை பிரதேச வைத்தியசாலை

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள்.

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து பொறுப்பு வைத்திய அதிகாரிக்கு 03.02.2023 மாலை 3.30மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு சேர்ப்பிக்கவும். மேலதிக விவரங்களை வைத்தியசாலை அறிவித்தல் பலகையில் பார்வையிடவும்.

பொருளாளர்
076 024 2148

செயலாளர்
077 338 3160

நோயாளர் நலன்புரிச்சங்கம்
பிரதேச வைத்தியசாலை இளவாலை (CS 48781)(3/6)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ். நகரில் இயங்கும் ஆண்களுக்கான பிரபல ஆடைகள் விற்பனை **Singnature** காட்சியறைக்கு விற்பனை பிரதிநிதிகள் உடன்தேவை.

(CR//39155)(4,6)

077 476 6296

## வேலையாட்கள் தேவை

வின்ஸ் கோம் கெயர் நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொழும்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வீடு மற்றும் வைத்தியசாலைகளில் வயோதிபர் நோயாளிகளை பராமரிப்பதற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

சம்பளம் : பேசித்தீர்மானிக்கப்படும்.

**076 099 3034, 076 099 3033**
**077 970 0512, 077 666 2953**
**021 785 5003**

## குருக்கள் தேவை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு அபிசேகம் மற்றும் ஏனைய கிரியைகளைச் செய்வதற்கு ஓர் அந்தணக் குருக்கள் தேவை. தகுதியுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பத்தை கொக்குவில் கிருபாகர சிவசுப்பிமணிய சுவாமி கோவில் பரிபாலன சபைக்கு அனுப்பிவைக்கவும். (நேரிலும் ஆலயத்தில் கையளிக்கலாம்).

விண்ணப்பங்கள் 05.02.2023 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி:** கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

ந.ஸ்ரீறஞ்சன் (செயலாளர்)
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
பரிபாலன சபை.
077 229 8186

## அறிதலும் பகிர்தலும்

விதை குழுமம் ஒருங்கிணைக்கின்ற அறிதலும் பகிர்தலும் என்கிற தொடரின் 19ஆவது நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரம் இரவு 7:30 மணிக்கு சூம் செயலியில் இடம்பெறவுள்ளது. (ம-14)

## இராசவள்ளிக்கிழங்கு கொள்வனவு

உணவு பதனிடும் நிறுவனமொன்றினால் யாழ்ப்பாணத்தில் விளைந்த இராசவள்ளிக் கிழங்குகள் மொத்தமாகக் கொள்வனவு செய்யப்படும்.

077 558 6685, 076 6408418

## வேலையாள்கள் தேவை

பூநகரியில் இயங்கிக் கொண்டிருக்கும் ரெஸ்ரோறன்ட் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

1) **Bar Man**
2) **Cook** (சமையலாளர்)
3) **Waiter**

அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 675 8732, 076 6274 842

(CS/48837)(4,6)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை 7ம் மாடியில் 2100 சதுர அடி 4 Bedrooms Apartment உடனடி விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம்

TP : 076 058 9822

Rich WIN

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை Galle Road ற்கு அருகாமையில் 3 Bedroom Apartments வெளிநாடு செல்ல இருப்பதால் உடனடி விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம் Contact : 077 7700582

Rich WIN

## திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள். விரைவாக நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

T.P: 077 964 9245

## நாய் விற்பனைக்கு

சான்றிதழ் வழங்கப்பட்ட ஒரு வயது நிரம்பிய றொட்வீலர் ஆண் நாய் விற்பனைக்குண்டு (IN 18716) (3/6)

தொடர்பு : 077 809 6961

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு தேவை. (CS 23160) (3/6)

தொடர்பு : 077 918 3074

## வீடு வாடகைக்கு உண்டு

* 02 பேருக்குரிய சிறிய வீடும்
* நிறுவனாங்களுக்குரிய பெரிய வீடும் (3மாடி 10 றூம்ஸ், 10 வாகனங்கள் விடக்கூடியது)
* படிக்கும் மாணவர்களுக்குரிய அறைகளும் வாடகைக்கு உண்டு.
* நாளாந்த, வாராந்த நவீன ஆடம்பர வீடுகள், அறைகள் உண்டு.

077 34 50039, 077 348 0039

## தேவை

பில்கிளார்க், பொதியிடல், உதவியாளர், மாவறுத்தல், அனுபவமுள்ளவர் (1500/=) என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு:- பிருந்தா மில்,
184, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 174 6101

## தேவை

விநியோகஸ்தர் விற்பனை பிரதிநிதி தேவை. (D.S.R)

தொடர்புகளுக்கு: 076 3520 489, 077 3915 630

## மணமகள் தேவை


யாழ்.இந்து கௌரவ 40 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 905 8615
(வைபர் & வாட்ஸ்ஆப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 • 08 • 1964



மறைவு 16 • 01 • 1997

## சீவரத்தினம் உதயகுமார்

(கலட்டிக்கண்ணன்)

திதி: அட்டமி

ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
தினம் உம் நினைவுகள் அப்பா !
அரவணைக்க ஸ்பரிசம் இல்லை எனிலும்
திண்ணிய துணாய் எமை தாங்கி என்றும்
திடமாய் உறையும் எம்முள்ளே !

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்

(CS 23168) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 • 06 • 1966



மறைவு 24 • 01 • 2023

## ஜீவா சரவணமுத்து

யாழ். கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட ஜீவா சரவணமுத்து அவர்கள் கடந்த (24.01.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் சற்குணவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜீவசறோ அவர்களின் அன்புக் கணவரும், சஜீவன், விதுர்ஷன், அஷோக், றஜனன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாக்ஷாயினி அவர்களின் அன்பு மாமனாரும், யாஷ் அவர்களின் அன்புப் பேரனும், தயாளினி (இலங்கை), ஜெயாளினி (டென்மார்க்), புவனேந்திரன் (அப்பன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நிர்மலகுமாரன் மற்றும் யோகேந்திரன், தனலட்சுமி, ஜீவமோகன், ஜீவமோகினி, ஜீவரஞ்சினி, ஜீவசாந்தன், ஜீவகவிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை **Chapel Ridge Funeral Home & Cremation Centre** இல் நடைபெற்று, தகனம் **Highland Hills Crematorium 12492 Woodbine Avenue** இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**197, GPS Road, கல்வியங்காடு.** **குடும்பத்தினர்.**

(CS 23177) 1/6

# மரண அறிவித்தல்



## திரு.தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (MO)

**(இளைப்பாறிய யாழ்.வைத்தியசாலை பதிவேட்டுப் பொறுப்பாளர்)**

பெரியபளை பளையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.தாமோதரம் பிள்ளை தர்மகுலசிங்கம் (MO) (இளைப்பாறிய யாழ். வைத்தியாசாலை பதிவேட்டுப் பொறுப்பாளர்) நேற்று (28.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னமுத்து (இளைப்பாறிய நூலகர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை) அவர்களின் அன்புக் கணவரும், தர்மராஜினி (ஆசிரியர், கிளிநொச்சி மத்திய கல்லூரி), தர்மராஜ் (லண்டன்), தர்மரஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமாறன் (அரச சார்பற்ற் நிறுவன இணைப்பாளர்-யாழ்ப்பாண மாவட்ட செயலகம்), கௌவுஸ்திகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆருசாவின் அன்புப் பேரனாரும், அமரர் சுவாமிநாதன் (ஓய்வுபெற்ற நிர்வாக அலுவலர்), அமரர். நாகரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்), தர்மராஜசிங்கம் (ஜேர்மனி), அமரர் தனபாலசிங்கம் (இளைப்பாறிய கிராம அலுவலர்), அருமைநாதன் (ஓய்வுபெற்ற மருந்தாளர்), சிவநாதன் (சுவிஸ்), அரியமலர், திருச்செல்வநாதன் (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மலயான் காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பெரியபளை, பளை.** **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சிவபாலன் நந்தகுமாரி

(இளைப்பாறிய உப அதிபர், ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி)

துன்னாலை கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலன் நந்தகுமாரி (இளைப்பாறிய உப அதிபர், ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி) அவர்கள் நேற்று (28.01.2023) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கம் - கனகாம்பிகை தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற சிவதாசர் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவபாலனின் பாசமிகு துணைவியும், சபாரத்தினம், குலரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நிர்மலா, சாந்தநாயகி, ஊர்மிளா, கமலாசினி ஆகியோரின் மைத்துனியும், நவநீதன், வாசுதேவன், சுதர்ஷனா, சிவராம், நாராயணி, கௌசல்யா, அகல்யா, ரவீனா, அபிதா, சுஜென், யசிந்தன், பரதன், மைக்கல் தோமஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 670 7558**
**077 525 9500**

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 23167) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Jaffna College - Vaddukoddai

## Vacancies

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for energetic, self-motivated and hard-working individuals to join the staff team for the following positions.

1. **Teachers**
   a. Mathematics – Grades 6 – 11 English / Tamil medium
   b. Combined Mathematics – A/L English / Tamil medium
   c. Physics – English / Tamil medium
   d. History – Tamil medium
   e. English – Language and Literature

**Requirements:**
- Special degree from a recognized university
- Age below 40
- Teaching experience at a school will be an added advantage.

   f. Primary – Minimum three passes at the G.C.E A/L
   g. Western Music – Grades 6 – 11

2. **Lab Attendant – Should have completed G.C.E A/L in the science stream.**
3. **Management Assistant**
   a. Minimum three passes at the G.C.E A/L
   b. Basic IT skills (MSWord, Excel, email).
   c. Good communication skills and ability to speak in all three languages will be an added qualification.

**Closing date for applications 13.02.2023**

Applications with the names of two non-related referees should be sent to **hr@jaffnacollege.lk**

**Only short listed candidates will be called for an interview.**

**Principal**

(IN 18701)(3/6)



**The Royal College of Jaffna**

தனியார் கல்வி நிலையம், பிரான்பற்று வீதி சங்கானை.

T.P:- 077 675 1649

O/L வர்த்தகம், AL கணக்கீடு

R. கிருத்திகா ( BBA)



**English Classes**

Grade 6 - 11 Basic கற்பிக்கப்படும்

(CS 48808)(3/6) T.P : 077 841 9507



**வீடு விற்பனைக்கு**

தெல்லிப்பழை. வறுத்தலைவிளான் பகுதியில் டச்சு வீதியிலிருந்து 500 M தூரத்தில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. விலைபேசி தீர்மானிக்கலாம்.

075 099 0230



**வாடகைக்கு**

யாழ். வைத்தியசாலை வீதியில் **கடைகள்** வாடகைக்கு உண்டு. அலுவலகங்களிற்கும் ஏற்றது.

077 162 0626



**பிரத்தியேக வகுப்புக்கள்**

வீட்டிற்கு வந்து Spoken English, IELTS Cooching மற்றும் கணினி வகுப்புக்கள் கற்பிக்கப்படும். (CS 21132) (3/6)

தொடர்பு : 077 909 6326



**பராமரிப்பு**

சாவகச்சேரியில் மூதாட்டி ஒருவரை மகள் போல பார்த்துக்கொள்வதற்கு அன்பும் பொறுமையும் கொண்ட பெண்ணொருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு இல: 071 961 1732 (ACO 22965) (4/6)



**VACANCY FOR NURSES & HELPERS**

**IN CANADA & UK**

பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் வீட்டு பராமரிப்பாளர்கள் முதியோர் மற்றும் உடல் நல குறைவு உள்ளவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் சௌகரியங்களை கவனித்துக் கொள்வதற்கு UK-க்கு பெண் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.
ENGLISH IELTS B1பரீட்சையில் தரம் 6இற்கு மேல் பெற வேண்டும்.
வேலை வழங்குநரிடமிருந்து உங்களுக்கு வேலைவாய்ப்பு ஸ்பொன்சர்ஷிப் சான்றிதழ்,
5 வருட VISA,
5 வருடங்களின் பின் நிரந்தரக் குடியுரிமை போன்ற மேலதிக தகவல்களுக்கு.



Lotus, Manning Place, Wellawatte
075 7972349 | 077 7285364



**மணமகள் தேவை**

28 வயதுடைய யாழில் பிறந்து லண்டனில் Assistant Accountant ஆகப் பணிபுரியும் 5'3" உயரமுடைய இந்து. எமது அழகான மணமகனுக்கு இலங்கையில் / லண்டனில் பிறந்து தற்போது லண்டனில் PR உடைய படித்த அழகான மணமகள் தேவை.

076 632 4005

propuk1994@gmail.com (ACO 22966) (4/6)



**சிறுவர்களுக்கு ஓர் நற்செய்தி...**

# கனடாவில்

**கல்வியைப்பெற விரும்புகின்றீர்களா?**

**தற்போது விசா அனுமதி விகிதம் அதிகரித்துள்ளது.**

விசாவை பெற்றுக்கொள்ள அறிய வாய்ப்பு!!!



வயது 4 - 17 வரை

☑ 04 முதல் 17 வயது வரையிலான சிறுவர்கள் கனடாவில் கல்வி கற்க விண்ணப்பிக்கலாம்.

☑ பெற்றோர் இருவரும் உடன் செல்லலாம்.

☑ விசேட தகைமைகள் மற்றும் IELTS தேவை இல்லை

**அனைத்து கட்டணங்களும் விசாவிற்கு பின்**

எமது அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். +94 112 890 692

அலுவலக நேரம் :

வார நாட்களில் - காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

சனிக்கிழமை - காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

**Consolidated Academic Lanka (Private) Limited**

No.22-B, Station Lane, Nugegoda.

ceo@academiclanka.com / info@academiclanka.com

www.academiclanka.lk



UNIVERSITY COLLEGE OF JAFFNA · UNIVOTEC

**UNIVERSITY COLLEGE OF JAFFNA**
**University of Vocational Technology**
**Ministry of Education**
**Applications are open for the following Diploma courses**

1. Building Services Technology
2. Construction Technology
3. Cosmetology
4. Farm Machinery Technology
5. Food Technology
6. Hospitality Management
7. Information and Communication Technology
8. Mechatronics Technology
9. Production Technology

Closing Date 28th February 2023

*Entry Qualifications: GCE A/L Qualified or NVQ 4*

Accreditation QMS TVEC Approved Registration

Career Path: A/L or NVQ 4 → University College (NVQ 5 / Diploma → NVQ 6 / HND) → NVQ 7 / Degree

**For Application Form & more details please visit:**
* Our Website: www.ucj.ac.lk
* Telephone: 021-221-7791 or 021-221-7792
* For direct information: University College of Jaffna, No.29, Brown Road, Kokuvil, Jaffna.
* E-mail: asstregistrar@gmail.com

Please pay the Application Fee Rs.1000 to the Account No. (Peoples Bank 162-100100045947) and attach the bank receipt with Application


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யோகக்கலை கற்கை புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகக் கலை கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது. நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இந்தக் கற்கை நெறி இடம்பெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ள இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் கலந்துகொள்ளலாம். 3 மாத காலங்களைக் கொண்ட இந்தக் கற்கைநெறியை பூர்த்தி செய்வோருக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். பயில விரும்புவோர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத் தளத்திலோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதிக்கு முன்னர் 'கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-23)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்கக் கோரிக்கை

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் காலபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளைக் கால்நடை வளர்ப்பாளர்கள் கட்டிவளர்க்க வேண்டும் என கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கால்நடை வளர்ப்போர் சிலர் அறுவடை செய்த வயல்களில் மேய்ச்சலுக்காக கால்நடைகளை கட்டிவிட்டு செல்கின்றனர். அவை கயிற்றை அறுத்து அறுவடை செய்யாத வயல்களில் நெற்கதிர்களை மேய்ந்து நாசம் செய்கின்றன.

எனவே நெல் அறுவடைப் பணிகள் முழுமையாக முடிவடையும் வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும், தவறும்பட்சத்தில் விவசாய சம்மேளனங்களால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கமக்கார அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன. (ச-17)



வீட்டின் அனைவரினதும் புன்னகையை என்றும் பேண வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதற்காக ஏமாற்றுக்காரர்களிடம்

அகப்பட வேண்டாம்

சட்ட ரீதியாக மட்டும் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லுங்கள்

வெளிநாடு செல்லும் போது அழைக்கவும் 1989

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
இல: 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை கொஸ்வத்த, பத்தரமுல்ல

www.slbfe.lk



சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பௌலீனா சுபோதினி தயாளராசாவின் ஏற்பாட்டில், தேசிய அருங்கலைகள் பேரவையால் சாவகச்சேரி கோயில்குடியிருப்பு திருவள்ளுவர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தப்பட்ட பன்ன வேலைப் பயிற்சி வகுப்புகளின் நிறைவு நாள் நிகழ்வு நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அங்கு ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் இடம்பெற்றது. (ச-14-9)



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க வைரவிழாவில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் சமய, சமூகப்பணியைப் பாராட்டி சைவப்புலவர் சங்கம் 'சிவநெறிப் பிரகாசர்' விருது யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜாவால் வழங்கப்பட்டது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைஞர்...
ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்த நிலையில், இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 17 வயதுச் சிறுவனும், 24 வயதான இளைஞரும் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதையடுத்தே 14 நாள்கள் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-125)


## வேலையாட்கள் தேவை

சைவ உணவகத்திற்கு அப்பம்,
சமையல் உதவியாளர், உணவு
பரிமாறுபவர் உடனடி தேவை.
தொடர்பு: 076 423 6862
077 844 3590

## ஆரம்பகால திருமண சேவை

கனடா மணமகன் உள்ளது P.R.O
அவுஸ்திரேலியா மணமகன் உள்ளது P.R.O
லண்டன் மணமகன் உள்ளது P.R.O
உள்நாட்டு குறிப்புகள் உள்ளன.
திருமணச் சேவைக்கு பணிப்பெண் (வேலையாள்) சுன்னாகம் மாவிட்டபுரம் உட்பட்டது.
தொடர்பு: 077 52 89 851

## O+ சிறுநீரகம் தேவை

லண்டனில் வசிக்கும் வர்த்தகர் ஒருவருக்கு O+ சிறுநீரகம் தேவை. (50 வயதுக்கு உட்பட்டவர்கள் கொடுக்க விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
077 348 0039
வட்சப் - 0094773333233

## ENGLISH WORLD கட்டைப்பிராய்சந்தி, கட்டைப்பிராய்

Group and Personal Classes
புதிய கல்வியாண்டு - 2023
தரம்-06
தமிழ் மொழிமூலம்
English Medium
அனைத்து பாடங்களும் ஆரம்பம்
05.02.2023 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி
தனிப்பாடம் மற்றும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
● புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.
தொடர்பு:-077 1930 298


## மரண அறிவித்தல்



### திரு. சிவகுரு தங்கேஸ்வரன்

(இளைப்பாறிய சீமெந்து கூட்டுத்தாபன களஞ்சிய பொறுப்பாளர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சிவகுரு தங்கேஸ்வரன் அவர்கள் நேற்று (28.01.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு அன்னபூரணம் தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற நாரந்தனையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கண்மணி தம்பதியரின் மருமகனும், திருமதி நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், விசாகன் (ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), Dr. திருமதி ஜெ.யாழினி (வைத்திய அதிகாரி, யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.பொ.ஜெசிதரன் (வைத்திய அதிகாரி, யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி வி.பிரியகாந்தினி (முகாமையாளர், மக்கள் வங்கி, கொடிகாமம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான க.திலகவதி, வா.கமலாவதி, அ. புஸ்பவதி, ச.புனிதவதி மற்றும் திருமதி செ.பத்மாவதி, திருமதி ப. விவேகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான சொர்ணம்மா, அரசரட்ணம், ரஞ்சிதம்மா, கோபாலப்பிள்ளை, கனகராசா, யோகராசா, பரமேஸ்வரன் மற்றும் திருமதி பா.பூமணி, திரு.வே.நாகராசா ஆகியோரின் மைத்துனரும், ஜெ.லதுர்சன் (யா/இந்துக் கல்லூரி), ஜெ.பவித்ரா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வி.கஜலக்ஷனா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வி.திருபவன் (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2023) பிற்பகல் 01.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விதானையார் வீதி, கொக்குவில் கிழக்கு.
0777 351 342

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23155) 1/6

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09.08.1945

மறைவு
30.01.2022



தோற்றம்
12.05.1947

மறைவு
07.02.2022

### அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம் (மகான்)

(முன்னாள் இலங்கை போக்குவரத்துச்சபை சாரதியும், யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பேரூந்து கம்பனிகளின் இணையத்தின் திடீர் பரிசோதகரும், மேற்பார்வையாளரும்.)

நினைவுகளுடன் பல நாட்கள் நீண்டதுவே!
இவ்வுலகை விட்டு உங்களது உயிர் நீங்கியதுவோ
தூயகுணமதிலே எம்முடன் நிறைந்திருந்த தந்தையின்
பிரிவினிலே நாம் தவித்திருக்க காலன் மயக்கத்தில் எம்
பாயும் குருதியில் உறைந்த எம் அன்னையையும் பறித்தானோ

### அமரர் மகாலிங்கம் தவமணி

விதி எனும் வட்டத்தினுள் தங்கள் உயிரை சதி செய்த
– இறை என்றா நோகுவது
பாசத்திற்கு ஏங்கிய உறவுகளை தவிக்கவிட்டு எம்முடன்
வாழ்ந்த காலம் போதுமென மண்ணுலகில் விடைபெற்று
விண்ணுலகு சென்று ஓராண்டு கழிந்ததுவோ
என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

குடும்பத்தினர்
பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு நியாய விலை; இல்லையேல் போராட்டம்

## செல்வம் எம்.பி. எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 29

விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நியாய விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் அரசாங்கத்துக்கு எதிராக விவசாயிகள் ஒன்றுதிரண்டு போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது பெரும்போகத்திலும் நெல்லுக்குரிய நியாயம் கிடைக்கப்பெறாமையால் நெல் மூடைகள் கையிருப்பில் தேக்கமடைகின்றன என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இதனைச் சாதகமாக்கி இடைத்தரகர்கள் நெல்லை மிகவும் அடிமட்ட விலைக்கே கொள்வனவு செய்ய முன்வருகின்றனர். நெல்லைச் சந்தைப்படுத்தும் சபை மூலம் நெல்லைக் கொள்வனவு செய்வதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும் போதிய நிதி இல்லாததால் நெல் கொள்வனவை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பெரும்போகம் மேற்கொள்ளப்பட்டபோதும் நெல்லுக்கான நியாய விலையின்றி பெரும் நட்டத்தை விவசாயிகள் எதிர்நோக்க நேரிடும். எனவே விவசாயிகள் எதிர்நோக்கிய இழப்புக்கள், நிதிச்செலவு, உடலுழைப்பு ஆகியவற்றுக்கு பயன்கிடைக்கப்பெறும் வகையில் அரசாங்கத்தால் நியாயவிலை யில் நெல் கொள்வனவு செய்யப்படவேண்டும்.

தவறும் பட்சத்தில் விவசாயிகள் ஒன்றுதிரண்டு அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் குதிப்பர் அவர்களின் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பக்கபலமாக இருக்கும் - என்றார். (ச-213)

# பொருளாதார நெருக்கடி எரிமலையாக வெடிக்கும்

## நாலக கொடஹேவா எச்சரிக்கை

கொழும்பு, ஜன.29

ரணில் ராஜபக்ச அரசாங்கத்தால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. கடன் பெறல், இருக்கும் வளங்களை விற்றல் ஆகியவை ஜனாதிபதியின் பொருளாதார கொள்கையாக உள்ளது. பொருளாதார நெருக்கடி வெகு விரைவில் எரிமலை போல் வெடிக்கும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பத்தரமுல்லவில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்திய தவறான பொருளாதார கொள்கையை தற்போதும் நடைமுறைப்படுத்துகிறார். நல்லாட்சி அரசாங்கத்தில் பொருளாதாரக் கொள்கையை 69 இலட்ச மக்கள் புறக்கணித்து 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கையை நாட்டில் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எம்மிடம் குறிப்பிட்டவர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டார். 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்திய பொருளாதாரக் கொள்கை அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவில்லை.

மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பொருளாதாரக் கொள்கை செயற்படுத்தப்பட்டது. பல்வேறு நெருக்கடிக்குள்ளான மக்கள் இறுதியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். புறக்கணிக்கப்பட்ட பொருளாதார கொள்கை மீண்டும் துரதிர்ஷ்டவசமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

வரி அதிகரிப்பு, கடன் பெறல் மற்றும் மிகுதியாக இருக்கும் தேசிய வளங்களை விற்றல் ஆகியன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. அரசாங்கத்தின் வரி சீர்திருத்தங்களால் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ரணில் ராஜபக்சக்களால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

பொருளாதாரப் பாதிப்பு வெகு விரைவில் எரிமலை போல் வெடிக்கும். பலவீனமான அரசாங்கத்தை மாற்றியமைத்தால் தான் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் அரசாங்கத்தின் முடிவு ஆரம்பமாகும் - என்றார். (எ-இ)

# கடந்த ஆண்டை விடவும் வேகமெடுக்கும் டெங்கு!

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.29

இலங்கையில் இந்த வருடம் தை மாதம் கண்டறியப்பட்ட மொத்த டெங்குத் தொற்றாளர்களின் தொகையானது 2021ஆம் ஆண்டு இலங்கையில் ஆண்டு முழுவதும் கண்டறியப்பட்ட டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கைக்குச் சமனாக காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி யமுனாநந்தா தெரிவித்தார்.

அவர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 2023 ஆம் ஆண்டு தை மாதம் கண்டறியப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 300 ஆகக் காணப்படுகின்றது. அவர்களில் 33 சத வீதமானவர்கள் சிறுவர்களாகக் காணப்படுகின்றார்கள்

2022 ஆம் ஆண்டு தை மாதம் 200 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் 50 வீதம் தொற்று அதிகமாகக் காணப்படுகின்றது. டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை செய்யாவிட்டால் இந்த வருடம் சுமார் 2 ஆயிரம் டெங்குத் தொற்றாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு .

டெங்குத் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு மிகவும் முக்கியமாகும். டெங்குத் தொற்று அதிகம் பாதிப்பது சிறுவர்களையே. பெற்றோர்கள் இதில் கவனம் எடுக்க வேண்டும். டெங்குத் தொற்றானது சிறுவர்களை குறிப்பாக 15 வயதுக்குட்பட்டவர்களை மிகவும் கடுமையாக பாதிக்கின்றது. அடுத்ததாக வயது முதிர்ந்தவர்களை பாதிக்கின்றது. அடுத்ததாக உடற்பருமன் உடையவர்கள் சலரோக நோயுடையவர்கள் ஆஸ்துமா நோயுடையவர்களைப் பாதிக்கின்றது. டெங்குத் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு மிக முக்கியமாகும். வீதிகளில் கழிவுகள் காணப்படுதல் மிக முக்கியமான பிரச்சினை. 90 வீதமான மக்கள் வீதிகளில் கழிவுகளை வீசும் போது அதில் நுளம்பு பெருகுவதனால் டெங்கு நுளம்பு அதிகம் பரவுகின்றது. முக்கியமாக சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். கடந்த வருடம் சுமார் ஐந்து பேர் டெங்குத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் இறந்துள்ளார்கள். இந்த வருடம் இவ்வாறான இறப்புகள் ஏற்படாது இருப்பதற்கு நாம் முதலில் செய்ய வேண்டியது டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அகற்றவேண்டும். சுற்றுச்சூழலை சுத்தமாகப் பேணுவதால் டெங்குத் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் - என்றார். (எ-26)

# கலைப்பீட பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். பல்கலைக்கழக வலிகாமம் வலய கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன்றிலில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மாணவர்களால் பஜனை வழிபாடுகள், விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுகள், கலை நிகழ்வுகள் என்பவையும் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கௌரவ விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், சிறப்பு விருந்தினராக ரில்கோ ஹொட்டல் உரிமையாளர் திலகராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-125)

# ஐ.ம.ச. ஆட்சியிலேயே மக்களுக்கு நீதி கிட்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜன.29

நாட்டை அழித்து மக்களை வதைத்து ராஜபக்சக்கள் செய்த மோசமான அக்கிரமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நீதி கிடைக்கும், தீர்வு கிடைக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 'தீர்வற்ற நாட்டுக்குத் தீர்வு' எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியால் தெஹியத்தகண்டியில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொடர்ச்சியான மக்கள் சேவையை வழங்கும் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே நோக்கமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியால் நியமனமாகும் சகல உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் தனித்துவமான சட்ட ஒழுங்குமுறைகள் உள்ளன. அவற்றை மீறும் எந்தவொரு உறுப்பினருக்கும் தண்டனை பிறப்பிக்கப்படும். அவர்களுக்கு எதிராக தவறாது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள்.

எமது உறுப்பினர்களுக்கு ஒப்பந்தங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. பொதுமக்களின் சொத்துக்களுடன் விளையாடுவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. ஐக்கிய மக்கள் சக்தியால் விழுமியம் சார் உள்ளூராட்சி சபைகள் கட்டியெழுப்பப்படும்.

வரலாற்றில் எக்காலத்திலும் ராஜபக்சக்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது நானோ வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யவில்லை. பிரசாரக் கூட்டங்களை நடத்தவும் இல்லை. நாட்டை அழித்து மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் எவராலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாம் ஆட்சிப்பீடம் ஏறினால் அரசியல்வாதிகள் உள்ளிட்ட நபர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்பதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவோம். சர்வ கட்சிகள் அடங்கிய ஆணைக்குழுவொன்றை உருவாக்குவோம் - என்றார். (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '13'இனை...

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் 13ஆவது திருத்தம் தொடர்பில் சில திட்டவட்டமாக கருத்துக்களை ஜனாதிபதி ரணில் தெரிவித்திருந்தார். '13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவடையாது. அதை நான் முற்றாக நடைமுறைப்படுத்துவேன். அவ்வாறு அதை நடைமுறைப்படுத்தக்கூடாதாயின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை அரசமைப்பில் இருந்து நீக்குங்கள்' என்று ரணில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து 13 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி முற்றாக நடைமுறைப்படுத்த அனுமதியோம் என்று பெரமுனவின் முக்கியஸ்தரான வீரசேகர மற்றும் வீரவன்ஸ ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டில் குருதி ஆறு பெருக்கெடுக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இது தொடர்பில் வினவியபோதே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

இனவாதிகளின் கருத்துக்களைச் செவிமடுக்கவேண்டிய அவசியம் எமக்கில்லை. அவற்றைத் தூக்கிக் குப்பையில் போடுங்கள். 13 ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கின்றது. அதை இல்லாது ஒழிப்பதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. எனவே இனவாதிகளைப் பொருட்படுத்தாமல் 13 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார். (அ-ம-22)

## வடக்கில்...

பதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க வடமாகாணத்தின் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

அடையாளம் காணப்பட்டுள்ள மேற்படி 100 ஏக்கர் காணிகளையும் அந்தந்த மக்களுக்கு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும். 75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்தக் காணி விடுவிப்பு இடம்பெறுவதுடன், நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இது அமையவேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு, சுதந்திரதினத்துக்கு முன்னர் அனைவரும் ஏற்கும்படியான தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்திருந்தார். இதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் அவர் பேச்சுக்களிலும் ஈடுபட்டார். எனினும் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபடுவதாயின் வடக்கில் படையினரின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும், அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளை தமிழ்த் தரப்புகள் விதித்தன. இவற்றைச் செயற்படுத்தி நல்லிணக்கத்தை வெளிப்படுத்தினாலேயே தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபடலாம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் வலியுறுத்திய பின்னணியில் இந்தக் காணி விடுவிப்பு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பொருளாதார...

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2022ஆம் ஆண்டில் இலங்கை கடும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்தது. இதனால், அந்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சியானது மைனஸ் 11 வீதமாகப் பதிவானது. இந்த வருடம் இந்த நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்படி இந்த வருடம் மைனஸ் 3.5 அல்லது மைனஸ் 4 வீதமான பொருளாதார வளர்ச்சி பதிவுசெய்யப்பட வாய்ப்புக்கள் அதிகம். அடுத்த ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நேர்மறையில் செல்லும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ-ம)

## எவருக்கும்...

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை எந்த வகையிலும் சீர்குலைத்தால் நாடு கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் சந்தித்ததைப்போன்ற நெருக்கடிக்குள் சிக்குவதைத் தடுக்கமுடியாது. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார மற்றும் விவசாய வேலைத்திட்டங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின்படி நாடுகளுடன் இணைந்து செயற்படுத்தப்படும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் சிலரால் சீர்குலைக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன - என்றார். (அ-ம)

## மீற்றர்...

குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் முதன்மைச் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வரும் பெப்ரவரி 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருடன் தொடர்புடைய முச்சக்கர வண்டிச் சாரதி உள்ளிட்ட ஐவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

மீற்றர் வட்டிக்கு பணம் பெற்றவர்களை தோட்டக் காணி ஒன்றுக்கு அழைத்துச் சென்று கொடூரமாகத் தாக்கி துன்புறுத்தும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. இந்தக் காணொலிகள் தொடர்பில் வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது. மீற்றர் வட்டிக்கு பணத்தை வழங்கிவிட்டு பணத்தை மீள வசூலிப்பதற்காக வர்த்தகர்களை அடித்துத் துன்புறுத்தும் இருபதுக்கும் மேற்பட்ட காணொலிகள் பொலிஸ் உயர்மட்டத்துக்கு அனுப்பப்பட்டன.

அவற்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சுன்னாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காரில் பயணித்தவரை வாகனத்தினால் மோதி கொலை செய்ய முயற்சித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக பொலிஸில் சரணடைந்த நபரொருவர் உள்ளிட்ட மூவருக்கும் மீற்றர் வட்டிக்கு பெற்றவர்களை அடித்துத் துன்புறுத்தும் சம்பவத்துடன் தொடர்புள்ளமை தெரியவந்தது.

மருதனார்மடம் சந்தைக்கு அண்மையாக உள்ள தோட்டக்காணிக்கு அழைத்தே பலரை அடித்துத் துன்புறுத்தியும் அச்சுறுத்தியும் உள்ளனர் என்பதும் விசாரணைகளில் கண்டறியப்பட்டது. காணொலியில் முகக்கவசம் அணிந்து அடித்து துன்புறுத்தும் நபர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப்பின் குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

முதன்மை சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். அவரை பெப்ரவரி 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். காணொலியில் தலைக்கவசம் அணிந்தவாறு தாக்குதல் நடத்துபவர் என அடையாளம் காணப்பட்டவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சரணடைந்தார். இந்த நிலையில் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் முதன்மைச் சந்தேகநபருடன் தொடர்புடைய முச்சக்கர வண்டி சாரதி உள்ளிட்ட ஐவரை நேற்றிரவு கைது செய்தனர்.

'கைது செய்யப்பட்ட முதன்மை சந்தேகநபர் உள்ளிட்ட நால்வர் நாளாந்த மீற்றர் வட்டிக்கு பணம் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்களுக்கு முச்சக்கர வண்டி சாரதி கூலிக்கு உதவியுள்ளார்.

நாளாந்த வட்டிக்கு பணம் வாங்கியவர்கள் ஒரு வாரத்துக்குள் பணத்தையோ வட்டியையோ வழங்காவிடின் அவர்களை முச்சக்கர வண்டியில் அழைத்து வந்து அடித்து துன்புறுத்துவதை இந்தக் கும்பல் முன்னெடுத்துள்ளது. சிறு முயற்சிகளில் ஈடுபடுவோர் 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை நாளாந்த வட்டிக்கு இந்தக் கும்பலிடம் பணத்தை வாங்கி பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் துன்புறுத்தப்பட்ட எவரும் முறைப்பாடு வழங்கவில்லை. கைது செய்யப்பட்ட அனைவரும் காணொலி ஆதாரத்துடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-26-27)

## கறுப்பு...

நிலையில், இதற்கு திருகோணமலை சிவில் சமூக அமைப்பினர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் திருகோணமலை சிவில் சமூக அமைப்பினருக்கும், மத குருக்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு மதகுருக்களும் சிவில் சமூக அமைப்பினரும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## காரைநகர்...

2017ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட 'எழுதாரகை' பயணிகள் படகுச்சேவை, 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இதனால் காரைநகர் - எழுவைதீவு- அனலைதீவு - நயினாதீவு இடையிலான படகுச் சேவைகள் இடம்பெறுவதில்லை. படகுச் சேவைகள் தடைப்பட்டதால் தீவுப்பகுதிகளுக்கு இடையிலான போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகி வந்தனர்.

இந்த நிலையிலேயே மேற்படி விடயம் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப்பணிப்பாளர் குரூஸும் மற்றும் காரைநகர் பிரதேசபையின் தவிசாளர் ஸ்ரீ பாலச்சந்திரனும் நேற்றுக் கலந்துரையாடினர். இதன்போது குறித்த பயணிகள் சேவை தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப் பணிப்பாளர் குரூஸ் தெரிவித்துள்ளார். கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவுக்கு காரைநகரிலிருந்தும் பயணிகள் கப்பல் சேவையை நடத்தவேண்டுமென தவிசாளர் பணிப்பாளரிடம் வலியுறுத்தியுள்ளார். (அ-ம-125)

## பொதுமக்களுக்கு...

வடக்கு மாகாண மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண அறிவித்துள்ளார்.

மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்துத் துன்புறுத்திய கும்பல் தொடர்பில் வெளியாகிய காணொலிகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டமையை சுட்டிக்காட்டிய அவர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாண மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரட்ண இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அவர்களை அழைத்துவந்து மருதனார்மடம் தோட்டக் காணிக்குள் வைத்து அடித்துத் துன்புறுத்தும் கும்பல் தொடர்பில் கடந்த சில நாள்களாக சமூக ஊடகங்களில் காணொலிகள் வெளியாகின. அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து பொதுமக்களுக்கு சட்டத்துக்குப் புறம்பாக அடித்து துன்புறுத்தும் நபர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் பிரிவுகளுக்கு உத்தரவிட்டேன்.

அதனடிப்படையில் முதன்மை சந்தேகநபர் உட்பட ஐந்து பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல் ஏதாவது ஒரு வகையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். முறைப்பாடு வழங்குவதில் சிக்கல் இருந்தால் நேரடியாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு தகவல்களை வழங்கினாலும் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் மீது மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க நான் தயாராக உள்ளேன் - என்றார். (ம-26)

## கொக்கட்டிச்சோலை...

1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினரால் 86 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களுக்கான நினைவுத் தூபி மகிழடித்தீவு சந்தியில் அமைக்கப்பட்டது. அந்த நினைவுத்தூபியிலேயே நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆவது...

'13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் இருக்கவேண்டுமானால் யாராவது 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யவேண்டும். இந்த இரண்டில் ஒன்று நடக்க வேண்டும்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய சர்வ கட்சிக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட 'மொட்டு' வின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவிடம் வினவிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசமைப்புக்கு ஒரு சாபக்கேடான சட்டமாகும். இந்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் இடமளிக்கமாட்டோம். ஜனாதிபதி ரணில் கூறியது போல் அதை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தால் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். - என்றார். (எ-22)


## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கும் பிரபல சைவ ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும், வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

1) சமையற்காரர்கள் (ஆண்கள்)
2) பரிமாறுபவர்கள் (பெண்கள்)

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். (CS 48723) (3/6)

தொடர்பு: 076 330 4653

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி (A9) நுணாவில், கண்டி பிரதான வீதி முகப்பாக 4 நில.பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

கடைத்தொகுதிகள், வணிகங்கள், திருமணமண்டபங்கள்,ஹொட்டல்கள் அமைப்பதற்கு ஏற்ற இடம்.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப் படும். தரகர் தேவை இல்லை.

076 690 6272 (CS 23164) 4-6

## றோயல் அக்கடமி
## ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர் | அரசடி றோட், யாழ்நகர்

### புதிய கல்வியாண்டு - 2023

தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium

ஆரம்பம் 01.02.2023 புதன்கிழமை

* கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம் ஆகிய பாடங்கள் நடைபெறும்.

யாழ் றோயல் காலை 7 மணி
நல்லூர் றோயல் காலை 9 மணி

**தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.**

குறிப்பு: பெற்றோர் - ஆசிரியர் கலந்துரையாடலைத் தொடர்ந்து "நாள் வகுப்புக்கள்" ஆரம்பிக்கப்படும். - இயக்குநர்

## காணி விற்பனைக்கு

இயக்கச்சியில் 48 ஏக்கர் காணி விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)

Whatsapp: 076 009 3587

## விற்பனையாளர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் பான்சிக் கடைக்கு விற்பனையாளர் தேவை.
அண்மையில் வசிப்போர் விரும்பத்தக்கது. (CS 23160)(3/6)

077 041 1742

## மணமகள் தேவை

1981 ஆம் ஆண்டு பிறந்த A.L சித்தி பெற்று லண்டனில் 2 வருட கல்வி கற்று PR உடைய மணமகனுக்கு சரளமாக ஆங்கிலம் கதைக்க, எழுத தெரிந்த (இந்து அல்லது கத்தோலிக்கம்) மணமகள் தேவை. (லண்ட னில் வசிக்கும் பெண் விரும்பத்தக்கது.)

T.P : 077 668 3717 (CS 23160)(3/6)

## தரம்: 10, 11
### வணிகக் கல்வியும் கணக்கீடும்

நேரடி மற்றும் Zoom வகுப்புக்கள்
Zoom வகுப்புகளுக்கு இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் இணைந்துகொள்ளலாம்.

By: M.Dushiyankan (BBM,MSWCR)

(cs 48793) (2/6) 077 919 7908

## வீடு வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் குமாரசாமி வீதியில் 3 அறைகளுடன் கூடிய புத்தம் புதியவீடு வாடகைக்குண்டு.

076 419 2934

## சிங்களம்

ஆண்டு 6,7,8,9,10 வகுப்புக் களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

076 525 3411 (CS 98834) (4/6)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இடம் மாற்றப்பட்டு நவீன வசதிகளுடன் இயங்கிவரும் "சன்றைஸ் மெடி கிளினிக்கிற்கு" பின்வரும் பதவி நிலைகளுக்கு ஆட்கள் தேவை.

* Marketing Manager — துப்பரவு பணியாளர்
* பகுதிநேர தாதியர்
* மருந்தக விற்பனையாளர்
* கணினி இயக்குனர் (IT Technician)
* ஆய்வுகூட உதவியாளர்
* கணக்காய்வாளர் - (Accountant)

நேர்முகத்தேர்வு 31.01.2023 செவ்வாய்க்கிழமை
இடம்:- சன்றைஸ் மெடி கிளினிக் 580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 6069 / 021 222 8470

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் தங்கியிருந்து குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் நல்லொழுக்கமுடைய பணிப்பெண் தேவை.

T.P : 077 216 2622

## விற்பனைக்கு

Bajaj Boxer 2004 Model, சிவப்பு நிறம் சிறந்த பராமரிப்பில்.
விலை:-275,000/=

தொடர்பு: 076 479 3526

## விற்பனைக்கு

54 ஆசனங்களைக் கொண்ட நல்ல நிலையில் உள்ள Leyland bus வழி (route) அனுமதிப்பத்திரத்துடன் விற்பனைக்குண்டு. (CS/48802)4,6)

077 612 0953

## Wagon "R" Premium
## கார் விற்பனைக்கு

உற்பத்தி 2019, முதல்பாவனை 2019 Nov, 50800km இரண்டாவது உரிமையாளரிடம் உள்ள Wagon "R" கார் (Full Option) விற்பனைக்குண்டு. இலங்கைக்கு AMW ஆல் புதிதாக இறக்குமதி செய்யப்பட்டது. (CS 48805) (3/6)

077 630 6733, 076 399 3008

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள TVS முச்சக்கரவண்டி (பச்சை நிறம்) விற்பனைக்குண்டு. (CS 23135) 4,6)

076 702 7535

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள 17 குளி விஸ்தீரணமுள்ள வீட்டுடன் அமைந்த காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை. (CS 48809) (3/6)

071 121 3555, 077 190 9253

## கடை வாடகைக்கு உண்டு

இல.27, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம் (CS 23117) (3/6)

075 244 1545, 076 319 7319

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ (V) 1989 - 5'10'' உத்தராடம் 1ஆம் பாதம் தனுசு ராசி, சூரியன், செவ்வாய், புதன் 11ஆம் இடத்திலுள்ள Veterinary Surgeon (Pera University), Bio Chemistry MSc Canada University Canada இல் Veterinary DR ஆக தொழில் புரியும் மணமகனிற்கு மணமகள் தேவை. Canada செல்ல விரும்புபவர்கள் மட்டும்.

தொடர்பு : 077 960 9309
Whatsapp, 077 358 1585

## மணமகள் தேவை

1987 பிறந்த, கௌரவ குலம், அச்சுவினி நட்சத்திரம் கிரகபாவம் 14 1/2. சூரியன் செவ்வாய் (6) அவுஸ்ரேலிய PR உடைய BSc IT, MSc மணமகனுக்கு அழகிய நற்குணமுடைய பட்டதாரி மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 209 5599,
070 797 3185 (CS 48836) (4,6)

## சிறுநீரகம் தேவை

O group குருதி வகையைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவருக்கு சிறுநீரகம் தேவை.

தொடர்பு இல: 077 277 4727 (CS 23162) (4,6)

## ICT CLASSES

தரம் 9 - A/L வரையான வகுப்புக்கள் தனியாக / குழுவாக பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
O/L மாணவர்களிற்கான கடந்த கால வினா விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

T.P : 074 264 0468 (CS 23163)(3/6)

## பணிப்பெண் தேவை

யாழ்நகரில் உள்ள வீடொன்றில் 3 வயது, 5வயது இரு பிள்ளைகளை மட்டும் பராமரிக்கக்கூடிய 40 - 55வயதிற்கு உட்பட்ட தங்கி நின்று வேலைசெய்யக் கூடியபெண்தேவை.
சம்பளம் - 40,000/- + (தங்குமிட வசதி + உணவு)

075 988 1000, 077 937 0000 (cs 48831) (2,6)

## அகரம் உயர் நிலைக் கல்லூரி
## AHARAM HIGH STANDARD COLLEGE

மல்லாகம் | தரம் - 06 | கொக்குவில்

தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" நிர்வாகி

## பணிப்பெண் தேவை

யாழ்நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிக்கு தங்கி நின்று சமையல் வேலை செய்யக்கூடிய பெண் தேவை
வயது - 40 - 55 வயதுவரை
சம்பளம் - 40,000/- + (தங்குமிட வசதி + உணவு)

075 988 1000, 077 937 0000 (cs 48831) (2,6)

## காணி விற்பனைக்குண்டு

யாழ்நகரை அண்டிய அரியாலைப் பகுதியில் குசவம்பாள் வீதியில் (A9 இருந்து 400 மீற்றர்) 11 நிலப்பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு

யாழ்நகரை அண்டிய அரியாலைப் பகுதியில் A9 வீதிக்கு மிக அண்மையில் நான்கு பக்கமும் சுற்றுமதில் கொண்ட வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான சகல அனுமதிகளுடனும் கூடிய 5 1/2 பரப்பு (நிலப்பரப்பு) காணி உடன் விற்பனைக்குண்டு.

## தென்னங்காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் கரம்பகம் பகுதியில் 41 நிலப்பரப்பு தென்னங்காணி காய்க்கும் பருவத்துடனான தென்னங்கன்றுகளுடன் உடனடி விற்பனைக்குண்டு. (cs 23159) (2,6)

தொடர்பு: 070 402 4234




...த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!

பாரதிதாசன்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 தை 15 ஞாயிற்றுக்கிழமை (29.01.2023) சிகரம் : 134

"இதனால் நாடு பிளவுபடாது. விசேடமாக 13ஆவது திருத்தம் தொடர்பில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்மானத்தின்படி பார்த்தால் நாம் ஒற்றையாட்சிக்குள் இருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். நாம் தற்போது உருவாக்கிக் கொண்டுள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் நகரசபைக்குள்ள அதிகாரங்கள் கூட கிடையாது. லண்டன் நகரசபைக்கு இதனைவிடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூறமுடியுமென நான் நினைக்கவில்லை"

- ஜனாதிபதி ரணில்

# மீண்டும் பதின்மூன்றா?




நிலாந்தன்

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தரப்பிடமிருந்துதான் முதலில் வெளிப்பட்டது. ஆறு கட்சிகள் இணைந்து இந்தியாவை நோக்கிக் கூட்டுக் கோரிக்கையை வைத்தபொழுது அது ஒரு வாதப்பொருளாக மாறியது. கடந்த தைப்பொங்கல் விழாவில் வைத்து ரணிலும் அதைத்தான் சொன்னார். இப்பொழுது ஜெய்சங்கரும் அதைத்தான் கூறியிருக்கிறார், ஒரு இடைக்கால ஏற்பாடாக 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று. அவர் அவ்வாறு கூறுவதற்கு சில கிழமைகளுக்கு முன்பு தயான் ஜயதிலக்கவும் அதுபற்றிக் கூறியிருந்தார். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு 15 ஆண்டுகள் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று தயான் கூறுகிறார். ரணில் விக்ரமசிங்க கூறுகிறார், தனக்கு ஒன்றரை ஆண்டுகள் தேவை என்று. எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்பது ஒரு வலிமையான கருத்தாக மேலெழுகிறது.

அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வசதியானது. அவர் முன்பு மைத்திரியோடு ஆட்சியைப் பகிர்ந்த காலகட்டத்தில் சம்பந்தரோடு இணைந்து உருவாக்கிய ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைவானது 13 ஆவது திருத்தத்தைக் கடந்து செல்கின்றது. அதை அவர் "எக்கிய ராஜ்ய" என்று கூறினார். அப்படி ஒரு தீர்வை கட்டியெழுப்புவது குறித்து அவர் இந்தியாவுக்குத் தெரிவித்திருக்கவில்லை. தமிழ்த் தரப்பும் தெரிவித்திருக்கவில்லை. அவ்வாறு தமக்கு தெரிவிக்கவில்லை என்பதனை அப்போதிருந்த இந்தியத் தூதுவர் சம்பந்தரை சந்தித்தபொழுது குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருந்தார். அது 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. ஆனால் இப்பொழுது 'எக்கிய ராஜ்ய'விலிருந்து கீழிறங்கி மீண்டும் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவது என்ற நிலைக்கு அரசியல் வந்திருக்கிறது. மஹிந்தவும் 13ஐ ஏற்றுக் கொள்கிறார், சஜித்தும் 13ஐ ஏற்றுக் கொள்கிறார், எனவே பெரிய சிங்களக் கட்சிகள் மத்தியில் அதற்கு எதிர்ப்பு இல்லை. அதனால் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவது என்ற விடயத்தில் ரணிலுக்குப் பெரிய சவால்கள் இல்லை, மேலும் அதன் மூலம் இந்தியாவை வைத்துத் தமிழ்த் தரப்பைக் கையாள முடியும் என்றும் அவர் நம்புவார்.

இந்தியா கடந்த ஆண்டு இலங்கைத்தீவில் ஒப்பீட்டளவில் அதிகமாகப் பெற்றுவிட்டது. பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் முதலில் உதவிய நாடாகவும் அதிகமாக உதவிய நாடாகவும் இந்தியா காணப்படுகிறது. அதன் மூலம் இந்தியா, இலங்கை மீதான தனது பிடியை ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவில் இறுக்கிக் கொண்டுவிட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இந்தியா, இலங்கைத் தீவில் அதிகம் பெற்றுக்கொண்ட ஒரு ஆண்டாக கடந்த ஆண்டைக் குறிப்பிடலாம். கடனை மீளக்கட்டமைக்கும் விடயத்திலும் சீனாவை முந்திக்கொண்டு இந்தியா, இலங்கைக்கு சாதகமாக முடிவுகளை எடுத்தது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், இந்தியா கடனை மீளக் கட்டமைக்கத் தயார் என்ற செய்தியை 'இந்து' பத்திரிகையைப் பார்த்துத்தான் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி அறிந்து கொண்டார் என்பது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதை இந்தியா விரும்பவில்லை என்று கருதப்பட்டது. ஆனால் இந்தியாவை சுதாகரிப்பதில் அவர் கடந்த ஆண்டு முழுவதிலும் வெற்றிகரமாக உழைத்திருப்பதாகவே தெரிகிறது. அவரை இந்தியாவுக்கு வருமாறு ஜெய்சங்கர் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருக்கிறார். இவ்வாறு நெருக்கடியான காலத்தில் உதவிபுரிந்ததன்மூலம் இந்தியா சீனாவை முந்திக்கொண்டு கொழும்பை அதிகம் நெருங்கி வரலாமா என்று முயற்சிக்கின்றது. இவ்வாறு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ராஜதந்திரப் போட்டிக்குள் ஈழத் தமிழர்களை நுட்பமாக சிக்கவைக்கும் தந்திரம் மிக்கவர் ரணில் விக்கிரமசிங்க என்பதே ஈழத் தமிழர்களுக்கு இதிலுள்ள பாதகமான அம்சம் ஆகும்.

தந்திரசாலியான ரணில் மூன்று முனைகளில் விடயங்களை அணுகுகிறார். முதலாவது , தமிழ்த் தரப்போடு பேச்சுவார்த்தை. இரண்டாவது.இந்தியாவை வளைத்துப் போடுவது.மூன்றாவது ஐ.நா.வை சமாளிப்பது.ஒருபுறம் 13,இன்னொருபுறம் நிலைமாறுகால நீதி. இந்த இரண்டையும் சமாந்தரமாக அவர் முன்னெடுக்க முயற்சிக்கக் கூடும். தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்க முயற்சி என்று கூறிக்கொண்டு அவர் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை புதிய வடிவத்தில் உயிர்ப்பிக்க முடியும். அதன்மூலம் அவர் ஐ.நா.வைச் சமாளிக்கலாம். ஐ.நா. தீர்மானங்களில் 13 ஆவது திருத்தம் ஒருதீர்வாக முன்வைக்கப்படுகிறது. இந்தியா அதை ஊக்குவித்தது. எனவே நிலைமாறுகால நீதி,13 ஆவது திருத்தம் என்பவற்றின் ஊடாக ரணில் பல இலக்குகளை அடைய முயற்சிக்கிறார்.

கடந்த 21 ஆம் திகதி சம்பந்தரையும் சுமந்திரனையும் சந்தித்தபொழுது, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய சாத்தியமான வழிமுறைகளை அரசாங்கம் சிந்திக்கிறது என்ற ஒரு தோற்றம் ஏற்படத்தக்க விதத்தில் ரணில் கதைத்திருக்கிறார். கடந்த 26 ஆம் திகதி நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விக்கினேஸ்வரன் ஜனாதிபதியிடம் ஓர் அறிக்கையைக் கையளித்துள்ளார். அதில் மாகாணத்திடம் இருந்து மத்திய அரசாங்கம் பறித்துக் கொண்ட அதிகாரங்களை மீளப் பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதேசமயம் அந்தக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி ரணில் " நாம் தற்போது உருவாக்கிக் கொண்டுள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் நகர சபைக்குள்ள அதிகாரங்கள்கூட கிடையாது. லண்டன் நகரசபைக்கு இதனைவிடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூறமுடியுமென நான் நினைக்கவில்லை" என்று கூறியுள்ளார். அத்துணை பலவீனமான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை சிங்களக் கட்சிகள் எதிர்க்கக்கூடாது என்று அவர் கூற வருகிறாரா? 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்புவதன்மூலம் அவர் இந்தியாவைத் திருப்திப்படுத்தலாம்; ஒரு பகுதி தமிழ்க் கட்சிகளைத் திருப்திப்படுத்தலாம் ; ஐ.நா.வையும் திருப்திப்படுத்தலாம்.

இதில் பதிமூன்றாவது திருத்தத்தை ஓர் இடைக்கால ஏற்பாடாகக்கூட ஏற்றுக்கொள்ளாத தமிழ்த் தரப்புகள் என்ன செய்யப் போகின்றன? தமது தீர்வு முன்மொழிவை நோக்கி அந்தக்கட்சிகள் கடந்த 13 ஆண்டுகளாக எப்படி உழைத்திருக்கின்றன? என்னென்ன தியாகங்களைச் செய்திருக்கின்றன? ஒரு அரசியல் இலக்கை முன்வைத்து அதை நோக்கி உழைக்கத் தேவையான கட்டமைப்புகள் தமிழ்க் கட்சிகளிடம் உண்டா? தாம் விரும்பும் ஒரு தீர்வுக்காகப் போராடவோ தியாகம் செய்யவோ எத்தனை தமிழ் அரசியல்வாதிகள் தயார்? இந்த வெற்றிடத்தைத்தான் ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாகக் கையாளப் பார்க்கிறார். இந்த வெற்றிடத்தைத்தான் ஜெய்சங்கர் "தீர்வைப் பற்றி பேசுவதே தீர்வு ஆகிவிடாது" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். அதாவது பொருளாதார நெருக்கடி

05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழக ஆளுநர் கே.கே.ஷாவுடன் தந்தை செல்வா, அமிர்தலிங்கம், மங்கையற்கரசி ஆகியோர்.
Image Credit: Chelvanayakam Memorial Trust



வன்னிய சிங்கம், தந்தை செல்வா, S.W.R.D.பண்டார நாயக்கா, இராஜதுரை
Image Credit: Chelvanayakam Memorial Trust



இரும்புமனிதன் இ.எம்.வி.நாகநாதன், தந்தை செல்வா, S.W.R.D.பண்டாரநாயக்கா.
Image Credit: Chelvanayakam Memorial

1



பேராசிரியர் சி.பத்மநாதன்

# இலங்கை அரசியலும் இலங்கைத் தமிழர் உரிமைகளும்:

## தந்தை சா.ஜே.வே.செல்வநாயகத்தின் சாதனைகள்

எதிர்வரும் மார்ச் மாதம் தந்தை சா.ஜே.வே.செல்வநாயகத்தின் 125 ஆவது பிறந்த ஆண்டு நினைவு கூரப்படுவதை முன்னிட்டு பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய இந்தக்கட்டுரைத் தொடர் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

இந்தத்தொடரானது தமிழர்களது அரசியற் பரப்பில் தடம் பதித்து ஆழக் காலூன்றியவர்களும் வழிதவறிப்போனவர்களும் மறந்து போனவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்கிறது.

இன்று இனப்பிரச்சினைத் தீர்வைநோக்கி பேச்சுக்கான வாயிலும் தேர்தல் களமும் திறக்கப்பட்டுள்ள நிலையில், 70 ஆண்டுகளுக்கு மேலாக நீண்டு செல்லும் இனப்பிரச்சினை தொடர்பில் பல விடயங்களை இன்றைய தலைமுறைக்கு நினைவூட்டி வழிப்படுத்த முற்படுகிறது.

தமிழர்களது எதிர்கால நலன் குறித்துச் சிந்திப்பவர்களும் செயற்படுபவர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் அரசியல் பத்தி எழுத்தாளர்களும் அறிந்திருக்க வேண்டியவற்றை இந்தத்தொடரிலே செல்வநாயகத்தின் சாதனைகளூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார் பேராசிரியர் சி.பத்மநாதன் .

யாழ். பல்கலைக்கழக வேந்தரும் தகைசார் பேராசிரியருமான சி. பத்மநாதன், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். இலங்கை வரலாறு, தென்னிந்திய வரலாறு, இலங்கையில் இந்து சமயம், இந்தியப் பண்பாடு தொடர்பில் 35 க்கும் மேற்பட்ட நூல்களையும் 120 ஆங்கிலக் கட்டுரைகள் அடங்கலாக 200 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தனது வரலாற்று ஆய்வுகளுக்காக இலங்கையிலும் சர்வதேசத்திலும் பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

2005 ஆம் ஆண்டு இலண்டன் 'Cambridge Bibliographical Association' பேரா. பத்மநாதனுக்கு 'International Bibliography Intellectual' விருதை வழங்கிக் கௌரவித்தது. தமிழியல் பற்றிய ஆய்வுக்காக பேராசிரியர் செல்வநாயகம் விருதைப் பெற்றுக் கொண்ட முதலாவது தமிழரும் இவரே; 2008 ஆம் ஆண்டு இவ்விருதைப் பெற்றுக்கொண்டார். இதற்கு முன்னர் இவ்விருதைப்பெற்ற இருவரும் ஆங்கிலேயர்கள். 2013 ஆம் ஆண்டில் ஆசிய மரபுரிமைக்கான சர்வதேச சங்கத்தினால் நீலகண்ட சாஸ்திரி விருதைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர் , தற்போதும் இலங்கைத் தமிழர்களின் வரலாறு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகளை எழுதி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தை செல்வநாயகம் தனது சிந்தனைகளினாலும் செயல்களினாலும் இலங்கைத் தமிழர்களின் அன்பினையும் அபிமானத்தையும் இணையிலாத அளவிலே பெற்ற தலைவரானார். அவர் சொன்ன கருத்துக்களின் மூலமாக தாம் ஒரு தேசிய இனம் என்பதை இலங்கைத் தமிழர் உணர்ந்து கொண்டனர். அந்த அறிவுணர்ச்சியால் பிரதேசம், சமயம் என்ற நிலையிற் பிளவுபட்டிருந்த சமுதாயம் ஒன்றாக இணைந்து கொண்டது. இந்த இணைவினால் இலங்கை அரசியலிலும் நாடாளுமன்றத்திலும் புறக்கணிக்க முடியாத, ஒதுக்கிவிட முடியாத வலுவினைத் தமிழ்ச் சமுதாயம் பெற்றது.

அவரின் அரசியற் பிரவேசம் ஒரு நெருக்கடி மிக்க காலம். இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானங்களின் விளைவாகத் தமிழர் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் குடியுரிமைகளையும் வாக்குரிமைகளையும் இழந்தனர். அந்த நிலையிலே அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியினை வேறு சில பிரமுகர்களோடு கூடி உருவாக்கினார். நாடாளுமன்ற உறுப்பினரான கு.வன்னியசிங்கமும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளரான டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதனும் அவரோடு இணைந்துவிட்டனர். புதிய கட்சியை வளர்ப்பது ஒரு இமாலயப் பிரயத்தனமாகிவிட்டது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் செல்வாக்கு உடனடியாக வீழ்ச்சி காணவில்லை. அவருடைய அன்றைய ஆதரவாளர்களும் முறைகேடான செயல்களில் ஈடுபட்டனர். இருந்தும் படிப்படியாக நிலைமைகள் மாறத் தொடங்கின. வன்னியசிங்கத்தின் பேச்சுகளினால் விவசாயிகள் பெரிதும் கவரப்பட்டனர்.

அந்நாட்களில் பல்கலைக்கழகப் பட்டதாரியாகவிருந்த அ.அமிர்தலிங்கமும் புதிய கட்சியின் (தமிழரசுக் கட்சியின்) மேடைகளிலே பேசத் தொடங்கினார். அவர் இலங்கையில் இணையில்லாத மேடைப் பேச்சாளர். அவரது பேச்சுக்களைக் கேட்ட தமிழ் இளைஞர்கள் புதிய கட்சியின் ஆதரவாளர்களாக அணிதிரண்டனர். சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளின் நடுப்பகுதியிலே தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு, இலங்கைத் தமிழர் சமுதாயத்தில் மேலோங்கிய நிலையினை அடைந்துவிட்டது. சொல்லின் செல்வர் என்று பாராட்டப்பெற்ற செ.இராசதுரையின் கொள்கைப் பரப்புகளை மட்டக்களப்பிலே கேட்ட மக்கள் ஒரே கொடியில் அணி திரண்டனர். தமிழரின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான சாதனமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. அதனை வளர்த்துக் கொள்வதற்கு தனது தேட்டங்கள் யாவற்றையும் செல்வநாயகம் ஒப்படைத்தார்.

தனது பிள்ளைகளுக்கென்று அவர் எதனையும் விட்டு வைக்கவில்லை. தெல்லிப்பழையிலுள்ள முதுசொமான வீடு மட்டுமே எஞ்சியிருந்தது. அவர் சுகபோக வாழ்க்கையில் ஈடுபடவில்லை. 1940 களில் அவரின் மாத வருமானம் ரூபா 10,000 வரையானது. இருந்தும் அவர் தனது கொள்கையின் காரணமாகச் சொந்தமான வீட்டை வாங்கவில்லை. கொள்ளுப்பிட்டியிலுள்ள ஆடம்பரமற்ற வாடகை வீட்டில் இறுதிக் காலம்வரை வாழ்ந்தார்.

இராமநாதன், அருணாசலம் ஆகியோரின் ஆழமான கல்வி ஞானத்தையும் நிர்வாக அனுபவத்தையும் தந்தை செல்வநாயகம் பெற்றிருக்கவில்லை. இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரின் உன்னதமான பேச்சாற்றலையும் அவர் பெற்றிருக்கவில்லை. அவரின் ஆளுமையும் வசீகரமும் வேறு விதமானவை. அவர் சுருக்கமாகவும் தெளிவாகவும் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையிலும் பேசுவார். அவர் சொல்வதெல்லாம் மக்களின் வாழ்வாதாரம் பற்றியவை; அவர்கள் எதிர்கொண்ட சவால்களைப் பற்றியவை; அவற்றை வெற்றி கொள்வதற்கான வழிகளைப் பற்றியவை, அதனால் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடிய பெருங் கூட்டங்களிலும் எல்லோரும் நிசப்தமாயிருந்து கேட்டனர். இக்காலத் தமிழர் சமுதாயத்தின் அபிலாஷைகள் எல்லாம் அவர் சொன்னவற்றை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை அடைவதற்கான துணிவும் பற்றுறுதியும் ஏற்படுத்துவதற்கு அவரின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் ஊன்றுகோலாகி விட்டன.



செல்வநாயகம்



சேர் பொன் அருணாசலம்



சேர் பொன் இராமநாதன்

அந்நாட்களில் இங்குள்ள தமிழர்கள் மகாத்மா காந்தியின் சிந்தனைகளில் மூழ்கியிருந்தனர்; அஹிம்சை நெறி, சாத்வீகம் என்பன அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. பெரியவரின் சிந்தனைகள் அஹிம்சை நெறியினை ஆதாரமாகக் கொண்டிருந்தமையால் அவரை ஈழத்துக் காந்தி என்று கொண்டனர். அவர் ஏற்படுத்திய இயக்கம் மேல்வரும் நான்கு பிரதானமான விடயங்களைப் பற்றியதாகும்:


1. இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான இலங்கைத் தமிழர் வாழும் பகுதிகளில், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே இறைமையிற் பங்கு கொள்ளும் வகையில் அதிகாரங்களைக் கொண்ட மாநில அரசினை ஐக்கிய இலங்கையில் அமைத்தல்.
2. தமிழ் மொழியினை ஒரு ஆட்சி மொழியாகக் கொள்ளுதல்.
3. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடித்தொகை விகிதங்களை மாற்றக்கூடிய வெளியாரின் குடியேற்றங்களை அரசாங்கம் கைவிடுதல்.
4. இந்திய வம்சாவழித் தமிழருக்கு டொனமூர் அரசியல் அமைப்பில் இருந்தவாறு உரிமைகளை வழங்குதல்.

இவற்றை அடைவதற்கான போராட்டங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி வேறு சில கட்சிகளின் ஆதரவோடு நடத்தியது. அவற்றின் பயனாகப் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. தமிழ் மக்கள் தங்கள் மொழி உரிமைகளைப் படிப்படியாகவும் முழுமையாகவும் பெற்றுக்கொள்ள முடிந்தது. இப்பொழுது தமிழ்மொழி ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை போதனா மொழியாகவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாவும் ஆவணப்பதிவு மொழியாகவும் அமைந்துள்ளது. தமிழ் மொழியிலே கல்வி கற்றவர்கள் அரசாங்க சேவைகளுக்குத் தெரிவுசெய்வதற்கான பரீட்சைகள் தமிழ்மொழியில் நடைபெறுகின்றன. இவை எல்லாம் சும்மா கிடைக்கவில்லை. பெரியவர் செல்வநாயகம் தலைமையிலே அவர் உருவாக்கிய கட்சியும் தமிழ் மக்களும் நடத்திய போராட்டங்கள் மூலமே கிடைத்தன.

(05 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதானி குழுமத்தின் நிதிமோசடி அம்பலப்படுத்திய அமெரிக்கா



அ.நிக்ஸன்

இலங்கைத்தீவில் காற்றாலை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடுகளை மேற்கொண்டவரும், வெளிநாடுகள் பலவற்றில் தனது வர்த்தகச் செயற்பாடுகளை துரிதப்படுத்தி வருபவருமான . இந்தியாவின் கோடீஸ்வரர் கௌதம் அதானியின் 'அதானி குழும கூட்டுத் தாபனம்' மிகப் பெரியஊழல்மோடிசக்குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளது.

அதானி குழுமத்துக்கு எதிராக அமெரிக்காவின் முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனமான ஹிண்டன்பெர்க் (Hindenburg Research) வெளியிட்ட அறிக்கை குறித்து இந்தியத் தேசியப் பங்குச் சந்தை (National Stock Exchange of India) மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India) விசாரணை நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது. அதேநேரம் செபி (SEBI) எனப்படும் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனைச் சபை (Securities and Exchange Board of India) அதானி குழுமத்தை விசாரணை நடத்த வேண்டுமெனவும் காங்கிரஸ் கோரியதால் மோடியின் பொருளாதார இலக்குக்கு சர்வதேசச் சந்தையிலும் உள்ளூரிலும் பெரும் சவால் தோன்றியுள்ளது. குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளுக்கு நிதியுதவி வழங்குவதாகக் கடந்த வாரம் கொழும்பில் அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்திருந்த நிலையில், அமெரிக்க முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை வெளிவந்துள்ளமை மோடி அரசுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் பிரதான அரசியல் கட்சியான காங்கிரஸ் விசாரணை நடத்த வேண்டுமென வலியுத்தியுள்ளமை இந்திய அரசியல் - பொருளாதாரச் செயற்பாடுகளில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளதை இந்திய ஆங்கில ஊடகங்கள் வெளிப்படுத்தி வருகின்றன. அமெரிக்காவின் ஹிண்டன்பெர்க் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதானி குழுமம் குறித்து ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதனை ஏசியன் நியூஸ் செய்தி நிறுவனம் உள்ளிட்ட பல இந்திய ஆங்கில நாளிதழ்கள் வெளியிட்டுள்ளன.

"அதானி குழுமம் பங்குச் சந்தையில் ஏராளமான மோசடி வேலைகளைச் செய்துள்ளது" என்று அந்தச் செய்தி நிறுவனங்கள் விமர்சித்துள்ளன.

இரண்டு வருடங்களாக அதானி குழுமம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட்டு இந்திய மதிப்பில் பதினேழாயிரத்து எண்பது இலட்சம் கோடி ரூபா நிதியை அதானி குழுமம் பங்குச்சந்தையில் மோசடி செய்து. பங்குகளை மாற்றியமைத்துள்ளதாக அமெரிக்காவின் ஹிண்டன்பெர்க் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டி குறித்த செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்க முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் மோசடி குற்றச்சாட்டினால், அதானி குழுமத்தின் பங்குகளுக்கு இந்திய மதிப்பில் நாற்பத்து ஆறாயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக அதானி குழுமம் கூறியுள்ளது. அத்துடன் அமெரிக்க நிறுனவத்தின் குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானது என்றும் அதானி குழுமம் மறுத்துள்ளது.

ஆனால் அமெரிக்கா நிறுவனமான ஹிண்டன்பெர்க் தமது ஆராய்ச்சியின் உண்மைத் தகவல்களை நியாயப்படுத்தி அதானி குழுமத்தின் மோசடிகளை விபரித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஹிண்டன்பெர்க் எனப்படும் தடயவியல் முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனம் இந்த விசாரணையை நடத்தி வந்தமை உலகறிந்த உண்மை. அதன்படி அதானி குழுமத்தின் நிறுவுநரும் தலைவருமான கௌதம் அதானியின் நிகர மதிப்பு சுமார் நூற்று இருபது பில்லியன் டொலராக இருந்தது. இது கடந்த மூன்று ஆண்டுகளில் நூறு பில்லியன் டொலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. அதேவேளை அதானி குழுமத்துக்குச் சொந்தமான ஏழு மிக முக்கியமான பொது வர்த்தக நிறுவனங்களின் மதிப்பும் சராசரியாக எண்ணூற்றுப் பத்தொன்பது சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் ஹிண்டன்பெர்க் தமது ஆராய்ச்சி அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதானி குழும நிறுவனத்தில் முன்னர் பணியாற்றிய மூத்த நிர்வாகிகள், நிறுவனத்தில் பணியாற்றிய வேறு பல அதிகாரிகளிடமும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டிருக்கின்றன. ஆவணங்களும் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் அதானி குழுமம் அரசாங்கத்துக்கு எதிராக நான்கு முக்கிய மோசடிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றின் மதிப்பு சுமார் பதினேழு பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஹிண்டன்பெர்க் நிறுவனம் வெளியிட்ட இந்த அறிக்கையை அடுத்து அதானி டோட்டல் காஸ் லிமிட்டெட் (Adani Total Gas LimitedATGL), அதானி எண்டர்பிரைசஸ் (Adani Enterprises Ltd AEL), அதானி டிரான்ஸ்மிஷன் (Adani Transmissions), அதானி கிரீன் எனர்ஜி (Adani Green Energy Ltd AGEL), அதானி போர்ட்ஸ் மனேஜ்மன்ற் (Adani Bird Management), அதானி பவர் லிமிட்டெட் (Adani Power Stock) மற்றும் அதானி வில்மர் (Adani Wilmar) ஆகியவற்றின் பங்குகள் சுமார் நான்கு சதவீதம் வரை குறைவடைந்துள்ளன.

இதன் பிரகாரம் அதானி குழுமத்தின் ஏழு பங்குகள் சந்தை மதிப்பில் சுமார் நாற்பத்து ஆறாயிரத்து எண்பத்து ஆறு கோடி ரூபாவை இழந்துள்ளன. 'அதானி டோட்டல் காஸ்' பன்னிரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்து ஆறு கோடி ரூபாவையும், அதானி போர்ட்ஸ் எண்ணாயிரத்து முந்நூற்று நாற்பத்து இரண்டு கோடி ரூபாவையும், அதானி டிரான்ஸ்மிஷன் எண்ணாயிரத்து முப்பத்து ஒன்பது கோடி ரூபாவையும் இழந்துள்ளதாக 'தினச்சுவடு' செய்தி இணையம் கூறுகின்றது.

அதானி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி, ஜுஷேிந்தர் சிங் குறித்த அமெரிக்க நிறுவனத்தின் அறிக்கையை முற்றாக நிராகரித்துள்ளார். அந்த அறிக்கையால் அதானி குழுமம் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் இது தேர்ந்தெடுக்கப்பட்ட தவறான தகவல் மற்றும் பழமையான, ஆதாரமற்ற மற்றும் மதிப்பிழந்த குற்றச்சாட்டுகளின் தீங்கிழைக்கும் கலவையாகும் என்றும் விபரித்திருக்கிறார்.

ஆனால் அதானியின் மூத்த சகோதரர் வினோத் அல்லது அவரது நெருங்கிய நண்பர்களினால் குறைந்தபட்சம் 28 ஷெல் நிறுவனங்கள் இயக்கப்பட்டதாக அமெரிக்க நிறுவனத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் இந்தியாவின் மிகப் பெரிய முதலீட்டாளரான அதானியின் அடுத்த வர்த்தகச் செயற்பாடுகளுக்குப் பெரும் தடை என்றும் ஏசியன்நியூஸ் நிறுவனம் வர்ணித்துள்ளது.

அதேவேளை, அதானி குழுமம் சட்ட நடவடிக்கை எடுத்தாலும் அதைப்பற்றி கவலைப்படமாட்டோம் என்றும் சட்டரீதியாக அதனை எதிர்கொள்வோம் என்றும் அமெரிக்காவின் ஹிண்டன்பெர்க் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது. அதானி குழுமத்திடம் இருந்து தங்களின் நிதி மோசடி அறிக்கையின் பிரகாரம் ஆவணங்களைக் கேட்போம் என்று ஹிண்டன்பெர்க் ஆராய்ச்சி நிறுவனம் சவால் விடுத்துள்ளது. இந்த அறிக்கையினால் ஒரே நாளில் மட்டும் அதானி குழுமத்துக்கு இந்திய மதிப்பில் ஐம்பத்து ஐயாயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஏசியன்நியூஸ் கூறுகின்றது.

ரஷ்ய - உக்ரைன் போரில் இந்தியா, ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுவதால் அமெரிக்கா . இந்தியாவுக்குக் கடும் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், அதானி குழுமத்துக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுக்கள் இந்தியப் பங்குச் சந்தையில் கடும் வீழ்ச்சியை ஏற்படுத்துமென மோடிக்கு ஆதரவான இந்திய ஊடகங்கள் அலறுகின்றன. அமெரிக்கா . இந்தியாவை ஒருபோதும் பகைத்துக்கொள்ளாது. ஆனால் இந்தோ - பசுபிக் விவகாரம் உள்ளிட்ட

## மோடிக்குத் தலையிடி; சாதகமாகப் பயன்படுத்துவாரா ரணில்?

தெற்காசியப் பிராந்திய அரசியல் - பொருளாதாரச் செயற்பாடுகளில் இந்தியா தமக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்றே அமெரிக்கா விரும்புகின்றது.

இதன் காரணமாகவே இந்தியாவுக்கு அமெரிக்கா கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றது. குறிப்பாக அயல்நாடான பாகிஸ்தான் அரசுக்கு அமெரிக்கா திடீரென உதவியளிக்கின்றது. பாகிஸ்தான் படைகளை மேலும் வலுப்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் காஷ்மீர் எல்லைப் பகுதிகளுக்குப் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவர் சென்று வருவது போன்ற செயற்பாடுகள் இந்தியாவுக்குக் கொடுக்கும் அழுத்தங்கள் தான். இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா பாகிஸ்தானுடன் நெருக்கமாகச் செயற்படுவதாக 'பாகிஸ்தான் ருடே ' என்ற ஆங்கில நாளிதழ் கூறுகின்றது.

இருதரப்பு மற்றும் பிராந்தியத்தில் பகிரப்பட்ட இலக்குகளை முன்னேற்றுவதற்குக் கட்டமைக்கப்பட்ட மற்றும் பரந்த அடிப்படையிலான அமெரிக்க-பாகிஸ்தான் ஈடுபாடு முக்கியமானது என்று பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் பெஷரீப் 25 ஆம் திகதி வெள்ளியன்று வலியுறுத்தியுள்ளதாக 'பாகிஸ்தான் ருடே' ஆங்கில செய்தித்தளம் தெரிவித்துள்ளது. ஷேபாஸ் ஷெரிப் பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதுவர் டொனால்ட் ப்ளோமுடன் கடந்த வியாழக்கிழமை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தபோதே இவ்வாறு கூறியிருக்கிறார். அமெரிக்க ஆதரவுடன் கடந்த ஏப்ரல் மாதம் இம்ரான் கானைப் பிரதமர் பதவியில் இருந்து கவிழ்த்து, புதிய பிரதமராகப் பதவியேற்ற ஷேபாஸ் ஷெரீப், இம்ரான் கானின் சீனா- ரஷ்ய ஆதரவுக் கொள்கைகளை மாற்றியமைத்து அமெரிக்காவுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்.

இந்த இடத்தில் இலங்கையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முற்படும் இந்தியா, தற்போது இலங்கைக்குக் கூடுதல் கடன் வழங்க இணங்கியிருக்கிறது. இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சென்ற 19 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் ரணிலுடன் பேச்சு நடத்தியபோது, இலங்கையின் கடன் வழங்குநர்கள் கடன் மறுசீரமைப்பில் தாமதத்தை ஏற்படுத்தினால், இந்தியா உதவியளிக்கும் என்று உறுதியளித்திருந்தார்.

இதனை அமெரிக்கா இராஜதந்திர நோக்கில் வரவேற்றுள்ளதுடன் அமெரிக்காவும் இலங்கைக்கு உதவியளிக்கும் என்று கொழும்பில் உள்ள தூதுவர் ஜூலி சங் உடனடியாகவே கூறியிருந்தார். அதனையடுத்து அமெரிக்காவுக்குச் சார்பான ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு உதவியளிப்பதாக கூறியிருந்தன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான உத்தரவாதங்களை வழங்கி இலங்கைக்கு உதவுவதற்கு ஐக்கிய இராச்சியம் முன்வந்துள்ளது.

பரிஸ் கிளப் மற்றும் பரிஸ் கிளப் அல்லாத கடன் வழங்குநர்களுக்கு இடையிலான இலங்கையின் உத்தேச ஒருங்கிணைப்புக்கு ஐக்கிய இராச்சியம் முழுமையாக ஆதரவளிப்பதாக ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலக இராஜாங்க அமைச்சர் அன் மேரி ட்ரெவெல்யன் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் சென்ற 26 ஆம் திகதி வெள்ளியன்று அறிவித்திருக்கிறார்.

ஆகவே இந்திய உதவிகளை மீறி இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் இந்தியாவுக்கு அமெரிக்கா பாடம் கற்பிக்கின்றது அல்லது இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்து ரஷ்ய உறவில் இருந்து விலகி முற்றாக தன்னோடு நிற்க வேண்டும் என்ற செய்தியை அமெரிக்கா கொடுத்திருக்கின்றது எனலாம். அமெரிக்க - இந்தியப் பனிப்போர் இலங்கையின் ஜனாதிபதி ரணிலுக்குத் தெரியாததல்ல. இந்தியாவைக் கடந்து அமெரிக்காவுடனும் சீனாவுடனும் சிறிய நாடு என்ற வகையிலும், பிராந்தியத்தில் இலங்கை முக்கியமான நாடு என்ற அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்பதிலும் நுட்பமாகக் காய்நகர்த்தும் ரணில், அதானி குழுமத்துக்கு எதிரான அமெரிக்க நிறுவனத்தின் குற்றச்சாட்டுக்களை இலங்கைக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் கூடும்.

கொழும்புத் துறைமுக மேற்கு முனையத்தின் அபிவிருத்திகளை அதானி குழுமத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் 2021 செப்ரெம்பரில் கைச்சாத்திடப்பட்டது. இருப்பினும் , அதற்குரிய அபிவிருத்திச் செயற்பாடுகளை அதானி குழுமத்துக்கு வழங்க இலங்கை விரும்பவில்லை. பௌத்த- சிங்கள கடும் எதிர்ப்புகளைக் காரணம் காண்பித்து, இலங்கை அதானி குழுமத்தை விலக்கியது.

அதன் பின்னர் மன்னாரில் காற்றாலை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடுகளைச் செய்ய அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறான அனுமதியை வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு நேரடி அழுத்தம் கொடுத்தார் என்றுகூட சிங்கள ஆங்கில ஊடகங்கள் அப்போது குற்றம் சுமத்தியிருந்தன. இந்த நிலையில் அமைச்சர் ஜெய்சங்கர் இந்த மாதம் கொழும்புக்குப் பயணம் செய்தபோது நடத்திய பேச்சுக்களில், இலங்கையில் இந்தியாவுக்குரிய முக்கியத்துவத்தை அதிகரித்திருந்தார். குறிப்பாக அதானி குழுமத்துக்கு இலங்கையில் முதலிட மேலும் சில அனுமதிகளை வழங்குவது பற்றியே பேசியிருந்தார். ஆனால் இலங்கைக்கு உதவ எந்தப் பொருளாதார நெருக்கடியைக் காரணம் கூறி இந்தியா காய்நகர்த்தியதோ அதே காரணத்தைச் சொல்லி இப்போது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு உதவியளிக்க முன்வந்துள்ளன. இந்தப் புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டிகளை நன்கு அவதானிக்கும் ரணில், இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கக்கூடிய உத்திகளைப் புதுவடிவத்தில் தற்போது வகுக்க ஆரம்பித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவுக்கான முக்கியத்துவத்தைக் குறைப்பது தொடர்பிலும் சிந்திக்கிறார். குறிப்பாக தமிழர் தாயகமான வடக்கில் அதானி குழுமத்துக்கு வழங்கிய முதலீட்டு அனுமதிகளை மறுப்பது மற்றும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாகக் கூறிக் கொண்டு காலத்தைக் கடத்துவது போன்ற உத்திகளையும் ரணில் தீவிரப்படுத்தச் சந்தர்ப்பம் இல்லாமலில்லை. குறிப்பாக அமெரிக்க - சீனா ஆகிய நாடுகளுடன் நேரடி உறவுகளைப் பேண வேண்டும் என்ற இலங்கையின் விருப்பம் நிறைவேறக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை ரஷ்ய உறவை முற்றாகக் கைவிட்டு அமெரிக்காவுடன் முழுமையாக நெருங்கிச் செயற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் ஒருபோதும் வந்துவிடாது. அமெரிக்காவும் முழுமையாக இந்தியாவைப் பகைத்துக்கொள்ளும் சூழல் இல்லை.

பாகிஸ்தான் , இலங்கை போன்ற நாடுகளை நேரடியாகக் கையாண்டு அழுத்தம் கொடுக்கலாமே தவிர, இந்திய உறவை அமெரிக்கா ஒருபோதும் நேரடியாக முறித்துக் கொள்ள முற்படாது. ஆனால் இப் புவிசார் அரசியல் போட்டிகள் நீடித்தால், ரணில் அதனைப் பயன்படுத்தி இந்தியத் தலையீட்டை நீக்கம் செய்து ஈழத்தமிழர் விவகாரத்தை முற்று முழுதாக உள்ளக விவகாரமாக மாற்றிவிடுவார் என்பது மாத்திரம் பட்டவர்த்தனம்.

ஏனெனில் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால், குறிப்பாக வட இந்தியாவைப் பாதுகாப்பதில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல்களினால், ஈழத்தமிழர் விவகாரத்தில் கவனம் செலுத்தக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே 13 ஐ தீர்வாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற தொனியை அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ்த்தேசியக் கட்சிகளுடனான சந்திப்பில் கடும் தொனியில் வெளிப்படுத்தியதாகத் தகவல்கள் கசிந்திருக்கின்றன. அதானி குழுமத்தின் நிதி மோசடிகளை விசாரணை நடத்த வேண்டுமெனக் காங்கிரஸ் கோரியதால், காங்கிரஸ் ஆதரவு அம்பானியை ஓரப்படுத்தி அதானியை முன்னிலைப்படுத்திய மோடி அரசுக்கு உள்ளூர் அரசியலிலும் பெரும் சவால் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

119

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | | | ■ |
| ■ | 11 | | | | | ■ | 12 |
| 13 | | ■ | 14 | | ■ | 15 | |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | | |
| | ■ | 21 | | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ..........................

.......................................................

கையொப்பம்:.......................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள் வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. சௌந்தர்யம் 4. தொடக்கமில்லாத் தன்மை 7. விலங்குகளில் வயதில் சிறியது 8. சொல்லுதல் 9. பிதா 11. தலையில் அணிவது 13. பிரி 14. தூங்கு 15. சிங்கம் 16. பழைய உடுப்பு 18. திடம் 19. ஒரு பிணி 20. சூரியன் 21. பிரிந்து செல்லும் போது தரும் விடை

## மேலிருந்து கீழ்

1. கவலை 2. முன் அல்ல 3. கட்டுப்பாடு இல்லாதவன் 4. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய வகைகளையுடைய பகைகள் 5. ஒரு பெயர் 6. ஓர் அசைச் சொல் 8. சத்தமிடல் 10. சமுத்திரத்தில் பயணம் செய்வது 11. பொருத்தமான 12. அருமையின் 13. கடவுள் 15. கமத்தில் பயன்பெறுவது இதன்போது 17. பின்னர் பிறந்த சகோதரன் 18. உபகாரம் 20. செவிலிப்பெண்

### சொற்சிலம்பம் போட்டி 118 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.நாவிதன் 4.மதகு 7. கடாரி 8. நடிகன் 9. தாய்ப்பால் 11.வறு 12. பிசகுதல் 14. அடம் 16. பாசம் 17. அவிதல் 18. தண் 19. மகன் 20. இருக்காது 21. மைசூர்

**மேலிருந்து கீழ்**

1.நாகதாளி 2. விடாய் 3. தரிப்பிடம் 4. மடி 5. தகவல் 6. குன்று 8.நல்கு 10. பாசம் 13. தகவின்மை 14. அசண்டை 15. நல்லூர் 16. பாதகி 17. அக 19. மது

**சொற்சிலம்பம் போட்டி இல.119**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
03.02.2023 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 119 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

1 ஆம் பரிசு
**பா.அபிநயன்**
துளசி அகம் v.h.லேன்,
கோப்பாய் தெற்கு

2 ஆம் பரிசு
**தவலிங்கம் தனுசன்**
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி

3 ஆம் பரிசு
**வி.சுரேகலா**
வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்

4 ஆம் பரிசு
**ஜெ.சுபாசினி**
மடத்தடி பலாலி வீதி,
உரும்பிராய்

5 ஆம் பரிசு
**சி.இராசலிங்கம்**
445, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு

# ஒதுக்கப்பட்ட இசைப் பூ



○ கோகுலராகவன்

தமிழ்த்திரையுலகு கண்டு கொள்ளாத இசையமைப்பாளர்களில் இன்னொருவர் இசையமைப்பாளர் ஷியாம். இவரைப்பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏற்கனவே இருந்த நிலையில், அண்மையில் நண்பர் எழுத்தாளர் சி. கதிர்காமநாதன் உரையாடும்போது ஷியாமைப்பற்றி எழுதக் கேட்டுக்கொண்டார். அந்த மீள் வலியுறுத்தலே இதை எழுதத் தூண்டியது.

இலங்கை வானொலி அறிமுகப்படுத்திய இசையமைப்பாளர்களில் என்னைக் கவர்ந்த இன்னொரு அற்புத இசை வல்லுநர்தான் ஷியாம். ஷியாம் அடிப்படையில் வயலின் கலைஞர். லால்குடி ஜெயராமனிடம் வயலின் கற்றவர். இதுவே அவர் திரையுலகில் நுழைய காரணமாகியது. நான் இப்போதும் அடிக்கடி முணுமுணுக்கும் பாடல்.

"மழை தருமோ என் மேகம்
மயங்குதம்மா எண்ணங்கள் யாவும்."

ஒரு சிலாகிக்கும் இசைவடிவம் . பாலு அவர்களின் குரல் நாதம் பேசும் வண்ணம் கிறங்க வைக்கும். இசை உள்ளத்தை கடந்து போக வேண்டும் .எண்ணத்தோடு ஒன்றிக்க வைக்க வேண்டும்.இதை இந்தப் பாடலில் ஷியாம் செய்திருக்கிறார்.1978 இல் வெளிவந்த, "மனிதரில் இத்தனை நிறங்களா?" என்ற படத்தில் இந்தப் பாடல் வரும்.

ஷியாம் தன் இசை வாழ்வில் விஸ்வநாதன்- இராமமூர்த்தி, சலீல் சௌத்திரி,தேவராஜன் போன்ற இசை ஜாம்பவான்களிடம் உதவி இசைக் கோர்ப்பாளராக இருந்தவர்.

இந்த அனுபவமே அவரின் இசை லாவண்யத்துக்கு காரணம்.

பஞ்ச கல்யாணி படத்தில் வரும்,

"பூமாதேவி போல வாழும் ஜீவன் நீதானே"

என்ற பாடல் ஷியாமின் இன்னொரு உன்னத படைப்பு."ஜீவன் நீதானே" என்ற இடத்தில் எஸ்.பி.பி. நன்றாக இழுத்து வளைத்து மெருகேற்றிப் பாடி இருப்பார்.

கேட்கக் கேட்க கேட்க சலிக்காத பாடல்தான் அது.அந்தப் பாடலில் நடித்திருப்பது ஒரு கழுதை என்பதும் ஒரு சிறப்பு. (தமிழ் படங்களில்தான் இந்தக் கைவண்ணங்கள் நிகழும் ).

"கருந்தேள் கண்ணாயிரம்" என்ற ஜெய்சங்கர் படத்தில் வரும்.

"பூந்தமல்லியில ஒரு பொண்ணு
பின்னால
போயிருந்தேண்டி அவ புடவை
நல்லால்ல"



இதுவே ஷியாமின் முதற்பட பாடல். இதிலே எஸ்.பி.பி.யும், மனோரமாவும் கலக்கி இருப்பார்கள். எஸ்.பி.பி.யின் கன்னிக்குரலில் இருந்த வசீகரம் பின்னாளில் இல்லாது போய் விட்டது கவலைக்குரியது .அந்தக்காலத்தில் அவரது குரல் கண்டசாலா,அல்லது பாலமுரளிகிருஷ்ணா குரலின் சாயலில் இருக்கும். அல்லது அவர்களின் சாயலில் பாடி இருக்கலாம். பின்னாளில் அவரது குரல் கழுவப் பட்டது போல மாறிவிட்டது.

> தமிழனாகப் பிறந்து மலையாள சினிமாவில் உச்சத்தை தொட்ட இசையமைப்பாளராக ஷியாம் இருந்தார் என்பது வேதனை தரும் செய்தி. யாரை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை மலையாள சினிமா புரிந்து கொண்டதால் தான் உலகத் தரம் வாய்ந்த 'மதிலுகள்' போன்ற திரைப்படங்கள் மலையாள சினிமாவில் உருவாகின.

கானா பாடல்களின் தொடக்கப் பாடல் இதுவாகத்தான் இருக்கும். இடையில் வரும் வார்த்தைப் படிமங்கள் இசையமைப்பாளரின் சேர்க்கை மிக துள்ளிசையாக அமைய பாடல் உச்சத்தைத் தொட்டது.தேங்காய் சீனிவாசனும் மனோரமாவும் நடனத்தில் பின்னி இருப்பார்கள்.

தமிழ் சினிமா பரிசோதனை முயற்சிகளுக்கு ஒருநாளும் தயாராக இருப்பதில்லை. அப்படி இருப்பவர்களைக் கண்டு கொள்வதுமில்லை. இதனால்தான் இயக்குநர்கள் ருத்தரய்யா, ஜெயபாரதி போன்றோர் கவனிக்கப்படாமல் போய் விட்டனர். இதேபோலவே பல இசையமைப்பாளர்களும் ஒதுக்கப்பட்டுள்ளனர் எனலாம்.

ஷியாமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஷியாமின் இன்னொரு பாடல் "உன்னைப் படைத்ததும் பிரமன் ஒருகணம் தன்னை மறந்திருப்பான் தங்கச் சிலை ...."

இதில் "தங்கச் சிலை" எனும் பல்லவியில் எஸ்.பி.பி. உயிரைக் கொடுத்துப் பாடி இருப்பார். இந்தச் சிறு இடங்களில் இழுவைகளை ஷியாம் கவனித்தே பாடகரைப் பாட வைப்பார்.

ஆனால் தமிழனாகப் பிறந்து மலையாள சினிமாவில் உச்சத்தை தொட்ட இசையமைப்பாளராக ஷியாம் இருந்தார் என்பது வேதனை தரும் செய்தி. யாரை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை மலையாள சினிமா புரிந்து கொண்டதால்தான் உலகத் தரம் வாய்ந்த "மதிலுகள்" போன்ற திரைப்படங்கள் மலையாள சினிமாவில் உருவாகின.ஷியாம் மலையாளத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்தவர். மம்முட்டி,மோகன்லால் படங்களில் கூட பணியாற்றியவர்.

ஆனால், தமிழில் முப்பத்தைந்து படங்கள் வரையே இசையமைத்தார். அதிலும் அவர் தமிழில் இசையமைத்த படங்கள் நட்சத்திர அந்தஸ்து கொண்ட நடிகர்கள் நடித்த படங்கள் அல்ல இதுவும் அவரை தமிழ் சினிமாவில் தக்க வைக்க முடியாமல் போன அம்சங்களில் இதுவும் ஒன்று. இளையராஜா என்கிற பெருங்காற்றும் ஷியாம் என்கிற அழகிய இசைப் பூவை தூர எறிந்துவிட்டது என்பதும் இன்னொரு அம்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## சிறுவர் கைவண்ணம்



சி.அபிந்திகா,
தரம்- 1A
மானிப்பாய் மகளிர் கல்லூரி



கே.அஸ்விதன்,
தரம்- 2
கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தி.



சி.ஸ்ரீராம்
sதரம் 7
யா/புனித பரியோவான் கல்லூரி

# இலங்கை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)



Image Credit: Chelvanayakam Memorial Trust

இந்த உரிமைகள் இலங்கைத் தமிழருக்கு மட்டுமன்றி முஸ்லிம்களுக்கும் இந்திய வம்சாவழித் தமிழருக்கும் கிடைத்துள்ளன. அதற்கான போராட்டங்களில் அவர்களும் கணிசமான அளவிலே பங்கு பற்றியுள்ளனர். இந்திய = இலங்கை உடன்படிக்கை மூலமாக தமிழ் ஒரு ஆட்சி மொழி என்ற நிலையினைப் பெற்றுவிட்டது.

இந்திய வம்சாவழியினரின் குடியுரிமைப் பிரச்சினை வெவ்வேறு வழிகள் மூலம் தீர்வடைந்துள்ளது. நாடற்றவர் என்ற நிலை முற்றாக நீங்கிவிட்டது. ஏனைய விடயங்கள் தொடர்பாகத் தீர்வுகள் கிடைத்தும் அவற்றை நிறைவேற்ற முடியவில்லை. அதற்கு எமது செயற்பாடுகளும் காரணமானவை என்பதை எவரும் மறைக்க முடியாது.

**வரலாற்றின் மூலம் கற்க வேண்டிய பாடங்கள்**

இலங்கையின் இனப்பிரச்சினை தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான பிரச்சினை அன்று. அது முற்றுமுழுதாக நாடாளுமன்றம் ஏற்படுத்திய பிரச்சினை. தூரநோக்கின்றியும் வரலாற்று நோக்கின்றியும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தலைவர்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினை. அதனாலே தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்கும் அவர்களுக்குரிய ஜனநாயக உரிமைகளைப் அபகரிப்பதற்கும் சட்டங்களை நாடாளுமன்றம் உருவாக்கியது. பல தசாப்தங்களாக அவசரகாலச் சட்டத்தினாலும் ஊரடங்குச் சட்டங்களினாலும் அவர்கள் அடக்கப்பட்டுள்ளனர். தமிழரின் முன்னாள் தலைவர்களிற் பலர் இழைத்த தவறுகளும் கோமாளிக் கூத்துகளும் இந்த நிலைக்கு ஏதுவாகிவிட்டன. அவற்றை அடையாளங் காண்பதும் இப்பொழுது அவசியமாகிவிட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நூறாண்டுக்கு மேலான வரலாறுண்டு. செய்யவேண்டியவற்றை செய்யாதமை, பேசவேண்டியவற்றைப் பேசாதமை தகாதவற்றைச் செய்தமை, கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தாமை, அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியவற்றை உதறித் தள்ளியமை, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதமை, உடன்படிக்கைகளை உதாசீனப்படுத்தியமை, ஏமாற்றுச் செயல்களில் ஈடுபட்டமை முதலானவை இலங்கையிலே வாழுகின்ற இரு புராதனமான தேசிய இனங்களிடையே புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பவற்றைப் பொருளற்றனவாக்கிவிட்டன. முடியாட்சி நிலவிய காலத்தில் இரு சமூகங்களுக்கும் இடையில் புரிந்துணர்வும், ஒற்றுமையும் ,நல்லுறவுகளும் உன்னதமான நிலையிற் காணப்பட்டன.

இப்பிரச்சினை தொடர்பான விடயங்களை ஒரு தலைப்பட்சமாக விளக்க முடியாது. நன்மை ,தீமைகளையும் குறை குற்றங்களையும் அறிவியல் நோக்கிலும் பாரபட்சம் இன்றியும் பார்க்க வேண்டும்.

**இராமநாதனும் அருணாசலமும் புரிந்துகொள்ளாத விடயங்கள்**

நவீனகால இலங்கையில் அரசியலில் ஈடுபட்டவர்களில் மேதாவிலாசம், வித்துவப் புலமை, நிர்வாகத் திறமை, தேசப்பற்று, சமூகசேவை என்பவற்றில் பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோருக்கு நிகரானவர்கள் எவருமில்லை. இந்தக் காரணங்களினால் சில காலப்பகுதிகளில் இலங்கையின் தேசத் தலைவர்களாக மக்களால் அவர்கள் ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள்.

படித்தவர்களுக்கென்று அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட, சட்டசபையின் தனியொரு ஆசனத்துக்கான தேர்தலில் போட்டியிட்டு, இராமநாதன் அமோக வெற்றி பெற்றவர். அவரது சகோதரரான அருணாசலம் இலங்கையின் அரசியல் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற இயக்கத்தை உருவாக்கி அதன் முதலாவது தலைவராகவும் விளங்கியவர்.

ஆனால், அரசியல் அமைப்பிலே ஏற்பட வேண்டிய மாற்றங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றி திட்டவட்டமாக அருணாசலம் எதனையும் கூறவில்லை. எல்லாச் சமூகங்களும் இணைந்து வழமைபோல வாழமுடியும் என்பது அவரது நம்பிக்கை. பிரித்தானியர் ஏற்படுத்திய அதிகாரங்கள் மத்திய மயமாக்கப்பட்ட ஒரே அமைப்பில் அது சாத்தியமற்றது என்பதை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை.

(தொடரும்)

# மீண்டும்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் பின்னரான தமிழ் அரசியல் எனப்படுவது மீண்டும் ஒருதடவை அதன் இயலாமையை நிரூபித்துக் கொண்டிருக்கிறது.உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை எதிர்கொள்வதில் மட்டுமல்ல, இந்தியாவை எதிர்கொள்வதில், ஐ.நா.வை எதிர்கொள்வதில், சீனாவை எதிர்கொள்வதில்,உலக சமூகத்தை எதிர்கொள்வதில், குறிப்பாக, மேற்சொன்ன அனைத்துத் தரப்புகளையும் கெட்டித்தனமாகக் கையாளும் ரணிலை எதிர்கொள்வதில் தமிழ்த் தரப்பு மீண்டும் ஒரு தடவை தோற்கப் போகிறதா?

அண்மைய நாட்களாக தமிழ் சமூகவலைத்தளங்களிலும் கைபேசிச் செயலிகளிலும் ஒரு "ரிக் ரொக்" காணொலி தொடர்ந்து பகிரப்பட்டு வருகிறது. அதில் இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்காக என்னென்ன நாடுகள் என்னென்ன உதவிகளைச் செய்தன என்ற விபரம் சுருக்கமாகத் தரப்படுகிறது.இந்தியாவில் தொடங்கி கிரேக்கம் வரையிலும்,உலகப் பேரரசுகள்,அமெரிக்காவுக்கு எதிரான சிறிய நாடுகள்,ஐ.நா.,ஐரோப்பிய ஒன்றியம்,இஸ்லாமிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்று உலகின் பெரும்பாலான நாடுகள் அவ்வாறு உதவியுள்ளன.கோட்பாட்டு வேறுபாடுகளுக்கு அப்பால், மத வேறுபாடுகளுக்கு அப்பால்,உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான பலசாலி நாடுகள் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை சுற்றிவளைத்திருக்கின்றன என்பதனை அந்தச்சிறிய காணொலி வி வரிக்கின்றது. ஆயின், ஐ.நா. உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் ஈழத் தமிழர்களைத் தோற்கடிப்பதற்காக ஒன்று திரண்டனவா? அவை அவ்வாறு திரளக் காரணம் என்ன? பிராந்தியத்தில் எதிரும் புதிருமாகக் காணப்படும் அமெரிக்கா=சீனா; இந்தியா= சீனா; இந்தியா=பாகிஸ்தான் ஆகிய நாடுகளை தமிழ்மக்களுக்கு எதிராக ஒரே கோட்டில் கொண்டு வந்து நிறுத்த இலங்கை அரசாங்கத்தால் எப்படி முடிந்தது? இஸ்ரேல்=ஈரான் ஆகிய எதிரும் புதிருமான நாடுகளை எப்படித் தமிழ் மக்களுக்கு எதிராக ஒரே கோட்டில் கொண்டு வந்து நிறுத்த முடிந்தது ? சிங்கள மக்கள் அரசுடைய ஒரு தரப்பாக இருப்பதுதான் அதற்குக் காரணமா ?அப்படியென்றால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் இதிலிருந்து எதைக் கற்றுக் கொள்ள வேண்டும்?

ஒரு சிறிய மக்கள் கூட்டத்துக்கு எதிராக முழு உலகமும் எப்படி நீசமாக மாறியது? பிராந்தி யத்தில்,அனைத்துலகில், எதிரெதிரான சக்திகளை எப்படி மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பினார்? என்ற கேள்விகளுக்கு தமிழ் மக்கள் விடை கண்டுபிடிக்க வேண்டும் . அந்த விடைகளைக் கடந்த 13 ஆண்டுகளாக கண்டுபிடிக்கத் தவறிய வெற்றிடத்தில்தானா இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன? அதனால்தானா '13' மீண்டும் அரங்குக்குள் வந்திருக்கிறது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Image Credit: National Maritime Museum, Greenwich, London
A small trading brig entering the Bristol Avon, painted by Joseph Walter

# மீட்பராக மருத்துவர் கிறீனது மீள்வருகை!

○ பா. துவாரகன்

## மருத்துவர் கிறீனது 2 ஆவது வருகை

மருத்துவர் கிறீன் 1862 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பிறதேசங்களுக்கு மிஷனரிகளை அனுப்பும் அமெரிக்க மிஷன் சங்கத்துக்கு (ABCFM) எழுதிய கடிதத்தில் தான் யாழ்ப்பாணம் புறப்படுவதற்குத் தயாராகி இருந்தமையைத் தெரிவித்திருந்தார். கப்பல் புறப்படுவதற்காக 5 மாதங்கள் வரை கிறீன் காத்திருக்க வேண்டியிருந்து. நியூயோர்க்கிலிருந்த கிறீன், 82 வயதான தந்தையிடம் இறுதிப் பிரியாவிடை பெறுவதற்காக கிறீன் கில்லிற்குச் (Green Hill) சென்றிருந்தார்.

யாழ்ப்பாணம் புறப்பட 4 தினங்களுக்கு முன்னர் 1862.05.22 அன்று மருத்துவர் கிறீனுக்கும் திருவாட்டி மார்க்கிரட் பெல்ப்ஸ் உவில்லியம் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. போஸ்ரனிலிருந்து சமாதானத்தின் நட்சத்திரம் (Star of Peace) என்ற கப்பலில் கிறீனும் அவரது பாரியாரும் 1862.05.26 அன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர். நான்கரை மாதங்களாக தரையைக் காணாத நீண்ட கடற்பயணத்தில் பெரும் அசம்பாவிதங்கள் ஏது மின்றி ஒக்ரோபர் மாதமளவில் சென்னையை அடைந்தனர். சில வாரங்கள் சென்னையிலிருந்த பின்னர் கிறீன் தம்பதியினர் இரட்டைப் பாய்மரக் கப்பலில் (Brig) புறப்பட்டு 1862.10.19 அன்று உடுப்பிட்டியை அடைந்து மானிப்பாய்க்குச் சென்றனர்.

மானிப்பாயிலே அமெரிக்க மிஷனரிகளும் கிறீனுடைய தமிழ் நண்பர்களும் இணைந்து அமெரிக்காவிலிருந்து திரும்பிய கிறீனுக்கும் முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கிறீனது பாரியார் மார்க்கிரட் பெல்ப்ஸ் உவில்லியம் அம்மையாருக்கும் மகத்தான வரவேற்பை அளித்து மகிழ்ந்தனர். கிறீனுடைய மாணவன் மருத்துவர் மெக்கின்ரைய 1861 இல் ஆரம்பித்த மருத்துவ மாணவ அணியினர் மருத்துவர் கிறீனது மேற்பார்வையின் கீழ் வந்தனர். கிறீனது மூத்த சகோதரர் அன்ரூ கஸ்வெல் கிறீன், நியூயோர்க் நகரிலே சட்டத்தரணியாகவும் நகரத் திட்டமிடல் அதிகாரியாகவும் கடமையாற்றினார்; பின்னர்

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 18

## சில குறிப்புக்கள்

இவர் நியூயோர்க் நகரின் தலைமைக் கணக்காளராகவும் (Comptroller) பணியாற்றினார். நியூயோர்க் நகரின் அடையாளச் சின்னங்களாக (Icons) விளங்கும் றிவர்சைட் ரைவ், மோர்னிங் சைட் பார்க், மத்திய பூங்கா (சென்றல் பார்க்), அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (American Museum of Natural History), நியூயோர்க் பொது நூலகம் (New York Public Library) ஆகியவற்றின் உருவாக்கத்துக்கு பிரதான உந்து சக்தியாக இருந்தவர் கிறீனது சகோதரர் அன்ரூ கஸ்வெல் கிறீன்.


மானிப்பாயை வந்தடைந்த கிறீன் 1862 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி தனது மூத்த சகோதர் அன்ரூ அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தனது பொறுப்பின் கீழ் வந்த புதிய மருத்துவ மாணவர் அணியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"என்னுடைய மருத்துவ மாணவர்களுக்கான விரிவுரையைப் பற்றி தங்களுக்கு விளக்கம் தரவேண்டும். மருத்துவ விஞ்ஞானம் பயில்வதில் மிகுந்த ஆர்வமும் பற்றுதியும் மதிநுட்பமுள்ள 11 இளம் மாணவர்கள் என்னிடம் கற்பதற்கு வந்துள்ளார்கள். 2 தொடக்கம் 3 மணி நேரம் வரை நீண்டு செல்லும் விரிவுரையில் அவர்கள் என்னையே பார்த்தவாறு இருப்பர். என்னில் மிகுந்த நம்பிக்கை கொண்டு எனது செயல்முறை விளக்கங்களைப் பணிவாகக் கேட்பார்கள். பின்னர் டிஸ்பென்சரிக்குச் சென்று நோயாளர்களுக்குச் சிகிச்சைளிப்பதைப் பார்வையிடுவார்கள். "

1862 ஆம் ஆண்டு வெளிவந்த அமெரிக்க இலங்கை மிஷன் ஆண்டறிக்கை மருத்துவர் கிறீனது மீள்வருகையைப் பற்றி சிலாகித்துக் குறிப்பிட்டிருந்தது. கிறீனது மீள்வருகையானது யாழ்ப்பாணத்திலே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்து. அமெரிக்க மருத்துவர் வெள்ளைக்கார பாதிரி மருத்துவர் சுகப்படுத்துபவர் கிறீன் யாழ்ப்பாணத்துக்கு மீளவும் வந்து விட்டார் என்ற செய்தி யாழ்ப்பாணம் எங்கும் பரவியதும் வீடுகளிலே துன்பப்பட்டு முடங்கியிருந்த நோயாளிகளும் நடமாடமுடியாத நிலையிலிருந்தவர்களும், அங்கவீனமடைந்தவர்களும் யாழ்ப்பாணத்தின் நாலா திக்குகளிலிருந்தும் கிறீனுக்கு முன் கொண்டு வரப்பட்டனர்.

ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் இயேசு நாதர் ஒரு கிராமத்துக்கு வருகை தந்த செய்தி அறிந்து பல்வேறு பிணிகளால் துன்பப்பட்டோரும் அங்கவீனர்களும் அவரைத் தரிசித்தால் தமது துன்பம் போய்விடும் என்றும் அவரது ஆடையைத் தொட்டாலே தங்களது நோய் மாறிவிடும் என்றும் நம்பிக்கையோடு இயேசுவைக் காண மக்கள் முண்டியடித்து வந்தது போல் நோயினால் துன்பப்பட்ட யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கையோடு கிறீனுக்கு முன் கொண்டுவரப்பட்டனர்.

கிறீன் ஒரு மருத்துவராகவும் கிறித்துவ மறைபரப்பும் ஊழியராகவும் இருந்தபோதிலும் அவர் பிரார்த்தனையால் நோய் தீர்ப்பவரல்லர்; அவர் தகுதிவாய்ந்த மருத்துவர்; சத்திரகிச்சை நிபுணர்; நன்கு பயிற்சிபெற்று விஞ்ஞான மருத்துவ அறிவை தனது வாழ்விலே பின்பற்றியவர்; அன்று அமெரிக்கப் பல்கலைக்கழங்களிலே நடைமுறையிலிருந்த பாடத்திட்டத்தை ஒத்த பாடத்திட்டத்தைப் பின்பற்றி மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கு முறைப்படி மேலைத்தேச மருத்துவத்தைப் போதித்து யாழ்ப்பாணத்திலே மருத்துவர்களை உருவாக்கியவர்; மருத்துவத் துறையின் தந்தை என்று போற்றப்படும் ஹிப்போகிரட்டீஸின் உறுதிமொழிப்படி மருத்துவம் பார்த்தவர்.


Manuscript:Unknown author
A 12th-century Byzantine manuscript of the Oath in the form of a cross

கிறீன் யாழ்ப்பாணம் வந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மேலைத்தேச மருத்துவ விஞ்ஞான அறிவு மக்களிடையே பரவலடையவில்லை; நோய் தொடர்பில் அறியாமையும் தவறான நம்பிக்கைகளும் இறை அச்சமும் மிகுந்திருந்தது. யாழ்ப்பாணம் வருகைதந்த 3 ஆவது மிஷனரி மருத்துவரான கிறீன் 4 வருட ஒய்வின் பின்னர் 2 ஆவது தடவையாக யாழ்ப்பாணம் வருகைதந்த போது அவரிடம் சிகிச்சை பெற வந்த மக்கள் கூட்டம் கிறீனையும் ஒரு தேவ தூதராக, நோயிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் மீட்பராகக் கண்டனர். கிறீன் யாழ்ப்பாணம் வருகை தந்து 2 மாதங்கள் கழிந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் 9 தினங்கள் தொடர்ச்சியாக மழை பெய்தது. இப்பெரு மழையால் 1862 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி காலைவேளையில் கிறீன் தங்கியிருந்த வீட்டின் கூரை முறிந்து விழுந்தது. இந்த அசம்பாவிதத் தின் போது கிறீனும் அவரது மனைவியும் மயிரிழையில் உயிர்தப்பினர். பெறுமதி வாய்ந்த பொருட்கள் சேதமடைந்தன. தற்காலிகமாகத் தமது இருப்பிடத்தை மாற்றினர். வீட்டை மீளமைப்பதற்கு கிறீனுக்கு 3 மாதங்கள் எடுத்தது.

## ஆபத்துக்கு உதவி மருத்துவமனையின் (FINS Hospital) அத்தியட்சகராகக் கடமையேற்ற கிறீன்

யாழ். அரசாங்க அதிபராக இருந்த சேர் பேர்சிவல் அக்லண்ட் டைக் ,யாழ். நகரத்திலிருந்த ஆபத்துக்குதவிச் சங்கத்தின் மருத்துவமனையையும் மருந்துச்சாலையையும் பொறுப்பேற்குமாறு மருத்துவர் கிறீனிடம் கேட்டிருந்தார். 1863 ஆம் ஆண்டு இரு பிரதான காரணங்களுக்காக இந்தப்பொறுப்பை மருத்துவர் கிறீன் ஏற்றுக்கொண்டார்.

முதலாவது, கிடைக்கும் மேலதிக வருவாயின் மூலம் மருத்துவ நூல்களை மொழிபெயர்ப்பதற்கும் அவற்றை அச்சிடுவதற்கும் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வது.

அடுத்தது, தனது மாணவர்கள் பல்வேறு விதமான நோயாளிகளையும் பார்வையிடுவதன் மூலம் பரந்த அறிவைப் பெறுவார்கள் என்று கிறீன் கருதியிருந்தமை.

மருத்துவர் கிறீன் வாரத்தில் 2 தினங்கள் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் கடமையாற்றுவதற்காக வருடத்துக்கு 50 ஸ்ரேலிங் பவுண் நிதியை அமெரிக்க இலங்கை மிஷனுக்கு வழங்குவதற்கும் மானிப்பாயிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு கிறீனது போக்குவரத்துச் செலவுக்காக மேலதிகமாக 25 ஸ்ரேலிங் பவுண் நிதியை வருடாந்தம் வழங்குவதற்கும் அரசாங்கம் உடன்பட்டிருந்தது. ஆரம்பத்தில் 3 மாதங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மருத்துவர் கிறீன் 5 வருடங்கள் இந்தப்பதவியில் தொடர்ந்தார். இங்கு தனது மாணவர்களுக்கு உடற்கூற்றியல் பாட செய்முறைப் பயிற்சியின் போது உடல் அறுவைப் பகுப்பாய்வுக்கு போதிய வசதி கிடைத்ததையிட்டு கிறீன் மகிழ்ச்சியடைந்தார். 1863 ஆம் ஆண்டு ஆபத்துக்குதவி மருத்துவ மனையில் 8,630 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

1863 காலப்பகுதியல் மானிப்பாய் மருத்துமனை மருத்துவர் மெக்கின்ரைய அவர்களது பொறுப்பில் இயங்கியது. இவருக்கு 3 மருத்துவ மாணவர்கள் உதவியாக இருந்தனர். 1863 இல் மானிப்பாய் மருத்துவமனையில் 1217 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

1863 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 7 ஆம் திகதிய கிறீனது நாட்குறிப்பில் சங்குசேகரிப்போர் இருவர் சுறாவினால் தாக்கப்பட்டு பாரதூரமான காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காகக் காலையில் ஆபத்துக்குதவி மருத்துவமனைக்கு வந்திருந்தமையை மருத்துவர் இடன்போர்த் அனுப்பிய தகவலிலிருந்து பதிவிட்டிருந்தார். (தொடரும்)


... பேரரசர் அர்தசெராக்சஸ் வழங்கிய வெகுமதியை மறுதலிப்பதைச் சித்திரிக்கும் புகழ்பெற்ற ஓவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## குட்டி அரசியல்வாதிகள் குழப்பத்தில்!

உள்ளூராட்சிசபைத் தேர்தல் மார்ச் 09 ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் - திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் இடம்பெறுமா என்பதே சமகாலத்தில் எழுப்படும் மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.
தேர்தல் நடத்தப்படும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது. ஆனால் தேர்தலுக்கு வழங்குவதற்கு திறைசேரியிடம் நிதி இல்லை என நிதி அமைச்சின் செயலாளர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.
இது சம்பந்தமான உயர்நீதிமன்ற தீர்ப்பு பெப்ரவரி 10 ஆம் திகதியே அறிவிக்கப்படவுள்ளது.
ஆக, அதுவரை தேர்தல் குறித்த ஐயப்பாடு மேலோங்கவே செய்யும். இதை உறுதிப்படுத்தும் விதத்திலேயே தேர்தலைப் பிற்போடுவதற்கு ஆளுங்கட்சி தரப்பில் இருந்தும் திரைமறைவில் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் இதனால் குழப்பிபோய் உள்ளனராம். எப்போது பிரசாரத்தை ஆரம்பிப்பது?தற்போதுள்ள கடதாசி விலைக்கு போஸ்டரை அடித்து, தேர்தல் நடக்காவிட்டால் என்ன செய்வது ? என குட்டி அரசியல்வாதிகள் பலரும் குழம்பிப்போயுள்ள னராம்.
ஒரு சிலர் பிரசாரத்தை ஆரம்பித்திருந்தாலும் பெரும்பாலானோர் மதில்மேல் பூனைபோலவே இருந்து வருகின்றனர்.





## ஐயையோ! அது நாங்களில்லை

'கோ ஹோம் கோத்தா' என்ற மகுட வாசகம் ராஜபக்ச குடும்பத்திலிருந்தே சமூகத்துக்கு கட்டவிழ்த்துவிடப்பட்டது என ராஜபக்ச குடும்பத்துக்கு நெருக்கமான ஒருவர் அண்மையில் வெளியிட்ட கருத்து மொட்டுக் கட்சி வட்டாரத்துக்குள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.
பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்சவை நீக்குவதற்கு கோத்தாபய ராஜபக்ச திட்டமிட்டதையடுத்தே, இவ்வாறானதொரு 'ஹேஷ் ராக்' குறியீடு சமூகமயப்படுத்தப்பட்டது எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
இது தொடர்பில் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலர், ராஜபக்ச குடும்பத்தில் உள்ள முக்கியமான உறுப்பினர் ஒருவரிடம் வினவியுள்ளனர்.
" கோத்தாவுக்கு அரசியல் தெரியாது என்பது உண்மைதான். அதற்காக நாம் அவரை விரட்டவில்லை. கோ ஹோம் கோத்தா என்பது போராட்டக்காரர்களால் உருவாக்கப்பட்டது.
அதற்கும் எமது குடும்பத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை."
என அந்த எம்.பி.க்களுக்கு ராஜபக்ச குடும்பத்தின் முக்கியஸ்தர் பதிலளித்தாராம்.

## அங்கே சரிவு; இங்கே எழுச்சி

உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் தெற்கிலே ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி கணிசமாக அதிகரிக்குமென கருத்துக் கணிப்புகள் ஊடாகத் தெரியவந்துள்ளது.
பிரதான சில கட்சிகளும், சிவில் அமைப்புகளும் கிராம மட்டத்தில் நடத்திய கருத்துக் கணிப்புகள் மூலமே இவ்விடயம் தெரியவந்துள்ளது.
அதேவேளை, மொட்டு கட்சிக்குரிய வாக்கு வங்கியில் சரிவு ஏற்படுமெனவும், அந்த வாக்குகள் 'ஹெலிகொப்டர்' கூட்டணியைச் சென்றடையும் எனவும் கூறப்படுகின்றது. அதேபோல வாக்களிப்புத் தொடர்பில் சில தரப்புகள் ஆர்வம் காட்டவில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## கூட்டுக்காக 'டம்மி'

நுவரெலியா மாவட்டத்திலுள்ள 12 உள்ளாட்சிசபைகளில் 6 சபைகளுக்கு தனித்தும், ஏனைய 6 சபைகளுக்கு கூட்டணியாகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் களமிறங்குகின்றது. மலையகத்தை மையப்படுத்தி இயங்கும் மற்றுமொரு கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணி நுவரெலியா மாவட்டத்தில் சஜித் அணியுடன் கூட்டணி அமைத்து 'தொலைபேசி' சின்னத்தில் போட்டியிடுகின்றது. இந்நிலையில் கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த போன்ற சிங்கள வாக்கு வங்கி உள்ள பகுதிகளைத் தவிர ஏனைய சபைகளில் தமிழர்களை தவிசாளர்களாக்குவதற்கு இ.தொ.கா.வும், முற்போக்குக் கூட்டணியும் ஆரம்பகட்ட இணக்கத்துக்கு வந்துள்ளனவாம். தொங்குசபை அமையும் சாத்தியம் அதிகம் இருப்பதால் ஆட்சியமைக்க ஒத்துழைத்து சபைகளைப் பங்குபோட்டுக்கொள்வதே இதன் திட்டமென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் ஓர் அங்கமாக சில தொகுதிகளில் இரு 'டம்மி' வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனராம்.

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்



**1915 பெப்ரவரி 10**
யாழ்ப்பாண நகரசபைச் செயலாராகக் கடமையாற்றிய முத்துக்குமாரு யாழ்ப்பாண மணியகாரனாக நியமிக்கப்பட்டார்.

**1915 ஒகஸ்ட்**
மண்டைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த படகு கவிழ்ந்ததில் 60 பேர் உயிரிழந்தனர்.

**1915 மே**
சிங்கள முஸ்லிம் கலவரம் ஏற்பட்டது.
பெரஹரா ஊர்வலத்திலிருந்தே இந்தக் கலவரம் தொடங்கியது. கண்டி - குருநாகல் வீதி வழியாக ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஊர்வலம் தெலியகொம்முவ என்ற இடத்தை அடைந்த போது, முஸ்லிம்கள் பள்ளிவாசல் வாசலில் மேளம் அடிக்க வேண்டாமெனக் கூறி ஊர்வலத்தை தடுத்தனர். ஆனால் ஊர்வலத்தில் வந்தவர்கள் மேளம் அடிப்பதை நிறுத்த மறுத்தனர். இதனையடுத்து முஸ்லிம்கள் ஊர்வலத்தின் மீது தாக்குதல் நடத்தியதுடன் புத்தர் சிலையையும் சேதப்படுத்தினர். இதனையடுத்து 14 முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டனர்.
28 ஆம் திகதி கண்டி ராஜ வீதியால் காசல்ஹில் வீதிக்கு ஊர்வலம் திரும்பிய போது பள்ளிவாசலுக்குள் இருந்த முஸ்லிம்களும் ஆப்கானியர்களும் ஊர்வலத்தில் வந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். கொழும்பிலிருந்து வந்துள்ள முஸ்லிம்கள் தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தப்போகிறார்கள் என்ற வதந்தி கிராமங்களில் பரவத்தொடங்கியது. முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் தனது கடையின் முன்னால் கூடிய காடையர் கூட்டத்தின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தார். பொலிஸாரின் முன்னிலையிலேயே இந்தச்சம்பவம் இடம் பெற்றது . எனினும் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸாரின் தாக்குதலில் பல சிங்களவர்கள் காயமடைந்தனர். திவுலப்பிட்டியவில் முஸ்லிம்களின் கடைகள் உடைக்கப்பட்டன. லியோ பெரேரா என்பவர் பொலிஸாரால் கொல்லப்பட்டார். சைமன் பெரேரா என்ற சப் - இன்ஸ்பெக்டர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டார். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் தவிர்ந்த பகுதிகளுக்கு கலவரம் பரவியது. இதில் 68 பேர் கொல்லப்பட்டனர்.

**1915 ஜூன் 01**
**சிங்கள அகதிகளுக்கு உணவளித்த இராமநாதன்**

கல்வரம் நடந்த இடங்களைப் பார்வையிடுவதற்காக இலங்கையர்களின் பிரதிநிதி இராமநாதன் புறப்பட்டார். ஆட்டுப்பட்டித்தெரு,சில்வர் ஸ்மித் வீதி,புதிய சோனகத்தெரு,அளுத்கடை சிறிபான வீதி போன்ற புகுதிகளில் வாழ்ந்த 150 முதல் 200 வரையான சிங்கள குடும்பங்கள் சிறுவர்கள் ,பெண்கள் உட்பட பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்திருந்தனர். கலவரம் குறித்து அவர்களுடன் இராமநாதன் உரையாடினார். அவர்கள் தாங்கள் முஸ்லிம்களின் தாக்குதலுக்கு அஞ்சியே பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்திருப்பதாக இராமநாதனிடம் தெரிவித்தனர். அவர்களை இராமநாதன் அழைத்துச்சென்று தமக்கான உணவை அந்த மக்களே சமைத்துச் சாப்பிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்த பின், சிங்கள வர்த்தகர் ஒருவரின் களஞ்சியத்தில் போய் தங்குமாறு பாதுகாப்பாக அனுப்பி வைத்தார்.

**1915 ஜூன் 03**
**பேச்சுவார்த்தை அனுசரணையாளராக இராமநாதன்**

ஜூன் 03 ம் திகதி சிங்கள- முஸ்லிம் தலைவர்களை அழைத்து சமரசப்பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார் இராமநாதன். பேச்சுவார்த்தை முடிவடைந்து மாக்கான் மரிக்கரை அவரது இல்லத்தில் விடும் பொருட்டு அழைத்துச்சென்றார் இராமநாதன்.
வழியில் மாக்கான் மரிக்கரின் தொப்பியை அவதானித்த சிங்களக் காடையர்கள் 'அதோ முஸ்லிம் ஒருவன் போகிறான்' என்றனர். உடனே இராமநாதன் மாக்கான் மரிக்கரிடம் தொப்பியை ஐரோப்பியர்களைப்போல் அணிந்து கொள்ளுமாறு கூறினார்.மாக்கான் மரிக்கரும் இராமநாதன் கூறியவாறே செய்தார். ஐரோப்பியர் ஒருவரின் துப்பாக்கி விற்பனை நிலையத்தின் முன்னால் காரை நிறுத்திய மாக்கான் மரிக்கர், ரிவோல்வர் ஒன்று தருமாறு கேட்ட போது துப்பாக்கி விற்பனை நிலைய உரிமையாளர் மார்ஷல் சட்டம் அமுலில் உள்ள படியால் தர முடியாது எனக் கூறி மறுத்து விட்டார்.
கலவரத்தைத் தொடர்ந்து 83 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். எப்.ஆர்.டயஸ் பண்டார நாயக்க, ஈ.ரி.டீ.சில்வா,டி.சி.சேனநாயக்க, டி.எஸ். சேனநாயக்க,டி.ஆர்.விஜயவர்த்தன, டாக்டர் கசியஸ் பெரேரா, எச்.டபிள்யூ. பெரேரா, மார்டினஸ் பெரேரா, ஜோன். எம் செனிவிரத்ன, எச்.அமரசூரிய, டீ.ஈ.வீரசூரிய,மொலமூரே.ஹென்றி மெல், , டீ.ஈ.வீரசூரிய,மொலமூரே. வணக்கத்துக்குரிய லாரெரொல்லே ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

கலவரத்தைத்தொடர்ந்து இலங்கையிலுள்ள சிங்களவர்கள் அனைவரும் நட்டஈடு செலுத்த வேண்டுமென பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உத்தரவிட்டனர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் விதித்த அபராதத் தொகை வருமாறு-

| | |
|---|---|
| ஒரு தனி நபருக்கு கொழும்பு | – 15.16 சதம் |
| சப்ரகமுவ மாகாணம் | – 1.35 சதம் |
| மேல் மாகாணம் | – 3.56 சதம் |
| மத்திய மாகாணம் | – 80 சதம் |
| தென் மாகாணம் | – 55 சதம் |
| வடமேல் மாகாணம் | – .36 சதம். |


கலவரம் தொடர்பாக சட்டசபையில் இராமநாதன் ஆற்றிய உரை 127 பக்கங்களில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

*(வரலாறு தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் நேர்கோணல் கடவுள் 6

இராகவன்



இப்போது செங்குத்தாக ஒரு பாதை வழியே கீழிறங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் வேகத்தில், நான் கீழே விழுந்து விடுவேன் எனத் தோன்றியது. சற்று நேரம் கடந்த பின்னர், அவர்கள் வேகம் குறைந்து, சமநிலைக்கு வந்திருந்தது.

'எங்கள் அபிமான நடிகரை, இறக்கி சிம்மாசனத்தில் அமர்த்துங்கள். களைத்து வியர்த்திருப்பார். சாமரம் வீசுங்கள். தாகம் தணிக்க மென்பானம் கொண்டு வாருங்கள்'

அவர்களில் சற்று உயரமானவன் கட்டளை பிறப்பித்தான். என்னை ஓர் ஆசனத்தில் அமர்த்தினார்கள். அது தான் அவன் குறிப்பிட்ட சிம்மாசனமாக இருக்க வேண்டும். சாய்ந்திருக்கக் கூடியதாக இருந்தது. இருவர் வலம் ,இடமாக நின்று சாமரம் வீசத் தொடங்கினர். கறுவாப்பட்டையை மெல்லும் வாசனை கமழத் தொடங்கியது. ஒருவன் பளபளக்கும் கண்ணாடிக் குவளையில் ஒரு திரவத்தை வழிய வழியக் கொண்டு வந்து, எனக்கு புகட்டினான். அது காரமும் சூடும் மிகுந்த மிளகு ரசம். வேறு வழியில்லாமல் அருந்த வேண்டி இருந்தது. எனினும் பருக இதமாகவே இருந்தது.

'இன்னுமொரு குவளை மிளகு ரசம் அருந்துகிறீர்களா?' எனப் புகட்டியவன் கேட்டான். 'இதுவே போதுமானது' என்று சொன்னேன். 'நல்லது சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாடகம் தொடங்கி விட்டால் ஓய்வெடுக்க அவகாசம் இருக்காது' என அவன் சொல்லி விட்டுப் போனான். அவனோடு மற்றவர்களும் வெளியேறிச் சென்று விட்டனர். அந்த இடம் இப்போது மயான அமைதிக்கு வந்திருந்தது. அவர்களால் சிம்மாசனம் எனக் குறிப்பிடப்பட்ட, அந்த இருக்கையில் சாய்ந்து அமர்ந்தபடியே நோட்டமிட்டேன். நிலமட்டத்தில் இருந்து இருபது இருபத்தைந்து அடி கீழ் அமைக்கப்பட்டிருந்த அரங்கத்தில்,நான் இப்போது அமர்ந்திருப்பதை உணர்ந்து கொண்டேன். மேலே ஒரு சக்கரச் சைக்கிளும், இரு சக்கர வாகனங்களும் தொடர்ச்சியாக வருவதும் போவதுமாக இருந்தன. இடைக்கிடையே முச்சக்கர வண்டிகளும், பாரவூர்திகளும் போய் வந்து கொண்டிருந்தன. என்னைச் சுற்றிவர சுமார் ஐம்பதாயிரம் பார்வையாளர் வரை அமர்ந்திருக்கக் கூடிய ஆசனங்கள் மேலிருந்து கீழாகப் பொருத்தப்பட்டிருந்தன.

என்னை இங்கு தூக்கிக் கொண்டு வந்து அமர்த்தியவர்கள் எந்த வழியால் வெளியேறிச் சென்றனர் என்பதை உன்னிப்பாகக் கவனிக்கத் தவறியமைக்காக மனம் நொந்தேன். அவர்கள் வெளியேறிச் சென்ற வழி தெரிந்திருந்தால், அங்கிருந்து தப்பித்துச் சென்றிருக்கலாம் என நினைத்துக் கொண்டிருந்தேன். மிளகு ரசம் என்னை மெல்ல மெல்ல உறங்கு நிலைக்குக் கொண்டு சென்றது.

'எங்களது மாமன்னர் சற்று நேரத்துக்கு முன்னதாக சிம்மாசனத்தில் உயிர் துறந்து விட்டார். நல்லாட்சி முடிந்தது. செங்கோல் சாய்ந்தது. ஓர் அரசன் சிம்மாசனத்திலேயே உயிர் துறந்ததை எங்காவது நீங்கள் கேட்டதுண்டா? வரலாற்றிலேயே முதல்முதலாக எங்களது மாமன்னர் தான் சிம்மாசனத்தில் உயிர் நீத்துள்ளார் என்பது கருத்தில் கொள்ள வேண்டிய துன்பியல் நிகழ்வாகும்' எவனோ உருக்கமான குரலில் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டே ,கண் விழித்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் போது என்னைச் சூழ்ந்து அந்தக் கோமாளிகள் நிற்பதைக் கண்டேன். நான் கண் விழித்துக் கொட்டாவி விட்டதை ஒருவன் கண்டு விட்டான். உடனே என் முகத்தருகே குனிந்து 'தயவு செய்து கொட்டாவி விடுவதை நிறுத்துங்கள் .கண்களை மூடிக் கொண்டு, அசையாமல் ஆடாமல் இருங்கள். நாடகம் ஆரம்பித்து சில நிமிடங்கள் கழிந்து விட்டன. இப்போது நீங்கள் சிம்மாசனத்தில் உயிர் நீத்த காட்சி, தொடங்கி விட்டது' எனக் கிசுகிசுத்தான். அப்போது கறுவாப்பட்டை மெல்லும் வாசனை கமழ்ந்தது.

' கறுவாப்பட்டை கைவசமிருந்தால் எனக்குக் கொஞ்சந்தா! மென்றுகொண்டே படுத்திருக்கிறேன்' என அவனிடம் கேட்பதற்கிடையில் நிமிர்ந்துகொண்டுவிட்டான். 'இப்போது நீங்கள் நமது மாமன்னர் சிம்மாசனத்தில் உயிர்நீத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த துயர நிகழ்வைக் காணலாம் 'என ஒருவன் சொன்னான். அவர்கள் விலகி நிற்க அரங்கம் நிறைந்திருக்கக் கண்டேன்.எல்லோரது பார்வையும் என்மீது குவிந்தது. நான் கண்களை மூடமறந்துவிட்டேன். என்னருகே சுற்றி நின்றவர்களில் சிலர் 'கண்களை மூடுங்கள்! கண்களை மூடுங்கள்! 'எனக் கிசுகிசுத்தனர். எனினும் நான் கண்களை மூடிக்கொள்ளவில்லை. என்னதான் நடக்குமெனப் பார்க்கலாம் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அரங்கத்தில் பரவலாகச் சலசலப்பு ஏற்பட ஆரம்பித்து ஒரு கட்டத்தில் கூச்சல் போடத் தொடங்கினர். என்னருகே நின்றிருந்த கோமாளிகளில் ஒருவன் "அமைதி, ஆச்சர்யம், என்னவொரு அதிசயம் பார்த்தீர்களா? அதுவும் வேதனை தரக்கூடிய அதிசயம், ஆச்சரியம். வழமையாக உயிர்நீப்பவர் கண்களை மூடிவிடுவார். ஆனால், நமது மாமன்னர் கண்களை மூடவில்லை. தான் உயிர்நீத்த பின்பும் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என விரும்பியிருக்கிறார். இதிலிருந்து அவர் தன் குடிமக்களாகிய உங்கள் மீது எந்தளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்' என உருக்கமான குரலில் தளதளத்தான். அரங்கத்தில் சட்டென்று நிசப்தம் சூழ்ந்தது.

ஒருவன் எனது கண்களை மூடிவிட எத்தனித்தான். எனினும் நான் கண்களை மூடிக்கொள்ளவில்லை. "தயவுசெய்து கண்களை மூடிக்கொள்ளுங்கள்" எனக் கடுந்தொனியில் கிசுகிசுத்தான். அப்போதும் நான் கண்களை மூடிக்கொள்ளவில்லை. பார்வையாளர் திரும்பவும் குழப்பமடைந்து சலசலக்க ஆரம்பித்தனர். அந்த சலசலப்பு உச்சமடைந்து கூச்சல், குழப்பம் ஏற்படுவதற்கிடையில் நான் உயிர்நீத்ததைச் சபைக்கு உரைத்தவன் மீளவும் தொடங்கினான். "இன்னொரு துயர்மிகும் அதிசயத்தைப் பார்த்தீர்களா? நாங்கள் மாமன்னரின் கண்களை சாந்திப்படுத்த மேற்கொண்ட முயற்சியும் பெரும் தோல்வியில் முடிந்துள்ளது. மாமன்னரின் கண்கள் சாந்தியடையாமல் இன்னமும் விழித்தபடியே இருப்பதை நீங்களே நேரடியாக பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். தன்னைக் காட்டிலும் நமது மாமன்னர் தனது குடிமக்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்திருக்கிறார் என்பதற்கு வேறெதும் சான்று அவசியமில்லையென்பதை துயர்மிகுந்த நெஞ்சுடன் உணர்ந்துகொள்வோம். மாமன்னரை முதலும் கடைசியுமாக ஒருதடவை முழுமையாகப் பாரத்துவிடுங்கள். தொடர்ந்து மாமன்னர் மஞ்சள்நீராட்டுதலுக்கு எடுத்துச்செல்லப்படவிருக்கின்றார். தற்போது கண்ணீர் சொரிந்து துயர்பகிர்ந்து கொள்வோம்"அவன் சொல்லி முடித்ததும் அங்கே குழுமிநின்ற வர்கள் 'ஓவென்று' குரலெடுத்து அழத்தொடங்கினர். இதுதான் தக்கதருணம் என்று உணர்ந்து நான் உரத்துச்சிரிக்கத் தொடங்கினேன். அது தனித்தொலித்தது.

அதனால் அநேகர் அதிர்சிக்குள்ளாக்கினர். எனது சிரிப்பொலி பார்வையாளருக்குக் கேட்டு விடாமல் பெரும் குரலெடுத்து அழத்தொடங்கினர். அதையும் மீறி என்னால் சிரிக்க முடியவில்லை. சற்றுநேரம் அரங்கம் கோமாளிகளின் அழுகையால் நிறைந்திருந்தது. பார்வையாளர் மத்தியில் சிலர் பொறுமையிழந்து 'கூவடிக்கத்' தொடங்கியிருந்தனர். அழுகையொலி சட்டென்று அடங்கியது. நான் உயிர்நீத்ததை சபைக்கு அறிவித்தவன் பேசத்தொடங்கினான்.

(தொடரும்)



## நரியும் நாய்களும்...!

காட்டிலே ஒரு கலகம்..!
வாட்டும் கொடிய
பிணந்தின்னிக் கழுகின்
அகோர ஆட்சியினால்
இளைய விலங்குகள்
கொதித்து எழுந்தன!

கழுகின் குகையை
சூழ்ந்து கொண்டன!
பயந்த கழுகோ
பறந்தே போனது!

கழுகின் கதிரையிலே
கண்வைத்த நரியொன்று
காலம் கனிந்ததென்று
கண்சிமிட்டி வந்தது!
அத்தனைக்கும் தலையாட்டி
அரியணையில் அமர்ந்தது!

'நீதி கேட்டு வீதி வந்த
நேசப் பிராணிகளே!
உங்கள் உரிமைக்காய்
உழைப்பேன் சத்தியமே'

நரியாரின் நளின மொழி
இளைய பிராணிகளை
இன்பக்கடல் தள்ள
துள்ளிக் குதித்தே
தூங்கப் போயின!

அன்றைய இரவே
ஆணை பிறந்தது!
நரிமொழி கேட்ட
ஓநாய்ப் படைகளோ
ஓடிப் புகுந்து
தேடி அழித்தன!
தூங்கிய பிராணிகளை
தூக்கிப் பின் தாக்கின!
போர்த்திய இலைகுழையை
பிடுங்கியே எறிந்தன!
அலறிய பிராணிகளோ
அழுதபடி ஓடின!

அடுத்ததாய் விடுத்தது
அன்பான அறிவிப்பு!
'பிரிந்து நிற்கின்ற
பிரியப் பிராணிகளே!
உங்களின் கூச்சலினை
உள்ளத்தே கொண்டேன்!
தனித்தனியாய் பேசி
தணிப்பேன் தாகத்தை!'
இனிக்கப் பேசியே
இளித்தது நரியுமே!

தனித்தனி அழைத்தே
இனிப்புப் பானங்கள்
இங்கிதமாய் கொடுக்க ...
பங்கிட்டுத் தின்றவர்களே
தமக்குள்ளே உறுமி
குரைத்துப் பின் ஊளையிட்டு
குதித்து ஓடிப் பிரிந்தன!

நரியும் நகைத்தது!
வரியாட்சி செய்தது!
பச்சைப் புழுக்களின்
பலங்கொண்டு காட்டில்
சோழப் பயிர்களின்
மண்ணை மேய்ந்தது!

- மேகதூதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org